# இறையியல் கோலங்கள்

வடிவம் 16 செப்டெம்பர் 2003 வண்ணம் 3



# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

# Irai Iyal Kolangal

Tamil Theological Quarterly

**Vol : 16**

**No : 03**

**September : 2003**

**வடிவம் : 16**

**வண்ணம் : 03**

**செப்ரெம்பர் : 2003**

**புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி**

**கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்,**

**இலங்கை.**

**ஆசிரியர் :**

அருள்திரு : ச.வி.ப. மங்களராஜா

**துணை ஆசிரியர் :**

அருள்திரு : ப.ஜோ. ஜெபரட்ணம்
அருள்திரு : பி. கிறிஸ்துநாயகம்

**நிர்வாக குழு :**

சகோ. தா. நிருபன் நிஷானந்
சகோ. அ. அன்ரன் ஸ்ரீபன்
சகோ. பா.ஜோ.அ. பிறாயன்
சகோ. சூ. லக்கோன்ஸ் பிகிறாடோ
சகோ. செ. பிரான்சிஸ் அசிசி
சகோ. பி.தே. யூட்தாஸ்.

**வெளியீடு :**

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம், இலங்கை.

**Editor :**

*Fr. S.V.B. Mangalarajah*

**Sub Editors :**

*Fr. P.J. Jebaratnam*
*Fr. P. Christunayagam*

**Administrative board:**

*Bro. T. Niruban Nishanand*
*Bro. A. Anton Stephen*
*Bro. B.J.A. Brian*
*Bro. S. Laconz Figurado*
*Bro. S. Francis Assisi*
*Bro. F.T. Judethas.*

**Publication :**

*St. Francis Xavier's Seminary,*
*Columbuthurai Jaffna, Sri Lanka.*
*Tel No : 021 - 2222482.*

# பொருளடக்கம்


01. ஆசிரியரிடமிருந்து . . .

02. இறுதி இராவுணவு, கல்வாரிப்பலி, திருப்பலி
அருட்சகோதரன் தே. செல்வரட்ணம்

03. நற்கருணைப்பலியும் நமது வாழ்வும்
திரு. ம. ஞானசேவியர்

04. நற்கருணைப்பணியாளர்
திரு. சி. சா. பங்கிராஸ்

05. அண்மைக்கால நற்கருணை அதிசயங்கள்
அருட்தந்தை லூயிஸ் பொன்னையா அ.ம.தி.

06. நற்கருணை பற்றிய திருச்சபையின் மடல்கள்
அருட்சகோதரன் யே. அ. அருள்தாஸ்
அருட்சகோதரன் ப. தே. யூட்தாஸ்

07. இவ் இதழின் இறையியலாளர் -12
அருட்சகோதரன் ப. விமல் அ.ம.தி.

08. Synopsis

09. குறுக்கெழுத்துப் போட்டி



# ஆசிரியரிடமிருந்து .....

இந்நாட்களில் கத்தோலிக்க திருச்சபையில் எல்லா மட்டங்களிலும் பிரபல்யமாயிருக்கும் தலைப்பு எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய பரிசுத்த தந்தை இரண்டாம் யோவான் பவுலின் தலைமை ஆயர் பணி ஏற்பின் வெள்ளி விழாவாகும்.

வரலாற்றின் இக்காலகட்டத்தில் இறைவன் இவரை எமது தலைமை ஆயனாகத் தந்தமைக்கு நன்றி கூறுவதுடன் திருத்தந்தைக்கு எம் உள்ளம் நிறைந்த வாழ்த்துக்களைக் கூறித் தொடர்ந்து அவருக்காக வேண்டுவதாக வாக்குறுதியளிக்கின்றோம்.

கடந்த 25 ஆண்டுகளில் நமது திருத்தந்தை பல சுற்றுமடல்களையும் அப்போஸ் தலிக்க அறிவுறுத்தல்களையும் எழுதியுள்ளார். இவை காலத்தின் தேவைக்கேற்ப பல்வேறு பட்ட தலைப்புக்களின் கீழ் எழுதப்பட்டுள்ளன.

இவ்வருடம் திருத்தந்தை எழுதிய திவ்வியநற்கருணை பற்றிய சுற்றுமடல் மற்றெல்லா மடல்களுக்கும் மணிமகுடமாக அமைந்துள்ளது எனலாம். எனவேதான் இவ்விதழும் நற்கருணை பற்றிய சிறப்பிதழாக மலர்கின்றது.

2ம் வத்திக்கான் சங்க ஏடுகளிலும் மற்றும் திருத்தந்தையரின் பல்வேறு மடல்களிலும், மறையுரைகளிலும் கோடிட்டுக்காட்டப்பட்டுள்ள நற்கருணை பற்றிய கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. உ-ம் "நற்கருணை திருச்சபையின் எல்லா ஆன்மீகக் கருவூலத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது."(2ம் வத்.சங்.ஏடு. திருப்பணியாளர்களின் பணியும் வாழ்வும் (PO) இல.5); "கிறிஸ்தவ வாழ்வனைத்தின் ஊற்றும் உச்சியுமான நற்கருணைப்பலியில்........"(2ம் வத்.சங்.ஏடு திருச்சபை (L.G) இல.11).

நமது திருத்தந்தையின் சொந்த அனுபவங்கள் நமது அன்றாட வாழ்க்கைக்குப் பயன்தரும் வகையில் தரப்பட்டுள்ளன. திருத்தந்தை 1946 நவம்பர் 2ம் நாள் போலந்தில் கிரக்கோ நகரப் பேராலயத்தில் குருவாகத் தமது முதல் திருப்பலியை ஒப்புக்கொடுத்த தினத்திலிருந்து திவ்விய நற்கருணை மீது தமது நம்பிக்கை எவ்வாறு வளர்ந்து வந்தது என்று விளக்குகின்றார். "திருப்பலி ஒப்புக்கொடுக்கும் ஒவ்வொரு நாளும் ஒப்புக் கொடுக்கப்பட்ட அப்பத்திலும் இரசத்திலும் எம்மாவுஸ் பாதையில் சென்ற இரு சீடர்களோடிணைந்த தெய்வீக வழிப்போக்கரை அதிகமதிகமாக இனங்காணக் கூடியதாயிருந்தது......."(திருச்சபையின் திவ்விய நற்கருணை இல. 59)

எல்லா நற்கருணை மடல்களிலும் மறையுரைகளிலும் வலியுறுத்தப்படும் இறுதி இரா உணவு – கல்வாரிப்பலி – திருப்பலி இடையேயான பிரிக்கமுடியாத தொடர்பும் நமது அன்றாட வாழ்வு நற்கருணைப்பலியினால் ஊட்டம் பெறுவதும் இங்கு விளக்கப்படுகின்றன. "திருப்பந்தியில் கிறிஸ்துவின் உடலால் ஊட்டம் பெற்று இம்மாண்புமிகு அருளடையாளம் ஏற்றமுறையில் குறித்து வியத்தகுமுறையில் விளைவிக்கும் இறைமக்களின் ஒற்றுமையை வாழ்விலே வெளிப்படையாகக் காட்டுகின்றனர்" (2ம் வத்.சங்.ஏடு. திருச்சபை (L.G.)இல.11).

திவ்விய நற்கருணையில் அன்றுபோல் இன்றும் இறைமகன் யேசுவின் உண்மையான பிரசன்னம் இருக்கிறது என்பது சந்தேகத்திற்கிடமின்றி அண்மைக்கால நற்கருணை இறைபிரசன்ன அதிசயங்கள் காட்டிநிற்கின்றன.

நமது மறை மாவட்டங்களில் தற்போது நற்கருணைப்பணியாளரின் தேவை உணரப் பட்டுள்ளது. ஆனால் இங்குள்ள மக்கள் இதுபற்றிப் போதியளவு அனுபவமும் பெற்றிராத காரணத்தால் நற்கருணைப் பணியாளரது பணி திருச்சபையால் பரிந்துரைக்கப்பட்டுள்ளமை பல வரலாற்றுக் குறிப்புகளுடன் தரப்பட்டுள்ளது.

வாசித்துப் பயன் பெறுவோம். திவ்விய நற்கருணை எங்களுக்கு தரப்பட்டிருப்பதால் கன்னிமரியாளைப் போல நாமும் எங்கள் வாழ்க்கையில் என் ஆன்மா ஆண்டவரைப் போற்றிப்புகழ்கின்றது என்று பாடலாம் (திருச்சபையின் திவ்விய நற்கருணை இல 58).

ச.வி.ப.மங்களராஜா

# இறுதி இராவுணவு கல்வாரிப்பலி திருப்பலி

## முன்னுரை

இறுதி இராவுணவு, கல்வாரிப்பலி, திருப்பலி ஆகியவற்றை தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு யூதர்களுடைய பாஸ்கா உணவில் இருந்து கிறிஸ்து நற்கருணையை ஏற்படுத்தியது வரையிலான வளர்ச்சியை உற்று நோக்குவது முக்கியமானதும் இன்றியமையாததுமாகும்.

எகிப்திய அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை அடைந்ததின் நினைவாக யூதர்கள் பாஸ்கா விழாவைக் கொண்டாடினர் *(வி.ப.12:1,28)* இவ்விடுதலையே கடவுள் மோயீசன் ஊடாக சீனாய் மலையில் தம் மக்களோடு உடன்படிக்கை செய்து கொள்வதற்கு வித்திட்டது.

விடுதலைப் பயண நூலில் குறிப்பிட்டுள்ள மோயீசனின் செயலுக்கு ஒப்பாக *(வி.ப.24:8)* கிறிஸ்து இறுதி இராவுணவில் தம்முடைய சொந்த இரத்தத்தினால் புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துகின்றார். *(மாற் 14:24, மத் 26:28)* பழைய ஏற்பாட்டில் பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்ட செம்மறி ஆடுகளின் இரத்தத்திற்கு பதிலாக தம்முடைய இரத்தத்தையே கையளித்ததால் இது ஒரு புதிய உடன்படிக்கையாகும் *(வி.ப. 12:7).* இங்கு இறுதி இராவுணவு யூதர்களின் பாஸ்காவிருந்தின் நிறைவாக மாறுகின்றது.

> "ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்"
> – திருப்பாடல் 34:8 –

அத்தோடு இறுதி இராவுணவு கிறிஸ்துவின் மரணம், உயிர்ப்பு, ஆகியவற்றின் முன்னேற்பாடாகவும், நினைவாகவும் விளங்குகின்றது. இறுதி இராவுணவில் தம்முடைய உடலையும், இரத்தத்தையும் கொடுத்ததின் மூலம் இயேசு கல்வாரியில் அனைத்து மக்களினத்திற்காகவும் தம்முடைய உடலையும், இரத்தத்தையும் கொடுத்து தன்னையே தியாகப் பலியாக்குவதை முன்னறிவிக்கின்றார். நற்கருணைப் பலியில் நாம் இறுதி இராவுணவு, பாடுகள் மரணம் இவற்றோடு கிறிஸ்துவின் உயிர்ப்பையும் நினைவு கூருகின்றோம்.

## கிறிஸ்துவின் இறப்பும் உயிர்ப்பும்- ஒரேபலி
## (The Death and Resurreccion of Christ - a Sacrifice)

கிறிஸ்துவின் இறப்பும், உயிர்ப்பும் - ஒரே பலி என்பதனை விளங்கிக் கொள்வதற்கு பழைய ஏற்பாட்டின் பலிகளை உற்று நோக்குவது இன்றியமையாததாகும்.

### பழைய ஏற்பாட்டில் பலி

பழைய ஏற்பாட்டில் பல்வேறு காரணங்களிற்காக பல பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன. இதனை இணைச்சட்டநூலும், விடுதலைப் பயண நூலும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

**உதாரணம்:** பாவப்பரிகாரப்பலி
எரிபலி

கடவுளுக்கும், மனிதனுக்கும் இடையிலான உறவே இப்பலிகளின் இலக்காக இருந்தது. கடவுளுக்கும், மனிதனுக்கும் இடையிலான உறவு மூன்று நிலைகளில் வெளிப்படுத்தப்பட்டது.

– முதலாம் நிலை: ஆபிரகாமுடனான உடன்படிக்கை (Promise made to Abraham)

– இரண்டாம் நிலை: நினைவுகூருதலோடு தொடர்புடையது (Connected with the memorial aspect)

இந்நிலையில் இரண்டு விதமான பலிகளை சந்திக்கின்றோம்.

1) பாஸ்காப்பலி - இதில் இரண்டு வகையான சடங்குகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.
   a) பரிகாரச் சடங்கு ( The rite of expiation)
   b) குடும்ப உணவில் ஒன்றிப்புப் பலி ( A Communion Sacrifice in the family meal)

2) உடன்படிக்கைப் பலி ( The covenantal sacrifice)

மூன்றாவது நிலை இறைவாக்கு உரைக்கும் மக்களுக்கு உரித்தானது (That of the Prophetic people)

இந்நிலையில் இறைவாக்கினர்கள் கடவுளுடைய வார்த்தைக்கு பிரமாணிக்கமாக இருத்தலையே முதன்மைப்படுத்தினர். சடங்காசாரங்கள் இரண்டாம் நிலையிலே வைத்து கணிக்கப்பட்டது.

### பழைய ஏற்பாட்டுப்பலிகளின் குணாதிசயங்கள்

மேற்குறிப்பிட்டுள்ளது போன்று பழைய ஏற்பாட்டில் பல விதமான பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டது. இப்பலிகள் பிறமதங்களில் ஒப்புக் கொடுக்கப்படும் பலிகளினின்று வேறுபடுகின்றது. ஏனெனில் பிறமதங்களில்

தங்களுக்கு விருப்பமானவற்றை பெற்றுக்கொள்வதற்காகவே பலிகள் ஒப்புக்கொள்ளப்பட்டன.

ஆனால் பழைய ஏற்பாட்டுப் பலிகள் மனிதனுடைய இயற்கைத் தேவைகளை முதன்மைப்படுத்துவதை விட கடவுளுடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சியாகவும், மனித வரலாற்றில் கடவுளின் பாதுகாக்கும் பிரசன்னத்தை உணர்ந்து கொள்ளுமுகமாகவும் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு பலியும் இரண்டு செயற்பாடுகளைக் கொண்டுள்ளது.

1) கடவுளுக்கு மக்களின் அர்ப்பணிப்பு

**( Act of response or dedication)**

உயிருக்கு நிகரான பலிக்கடாவின் இரத்தத்தை காணிக்கை யாக்குவது, கடவுளுக்கு மக்கள் தங்களை அர்ப்பணித்தலை குறித்து நிற்கின்றது. இதன் ஊடாக கடவுள் தங்களுடைய வாழ்க்கையில் செய்த அனைத்தையும் நினைவு கூர்ந்தார்கள்

2) பலிப்பொருளை கடவுள் ஏற்றுக்கொள்ளுதல்

**( The acceptance of the Victim by God)**

கடவுள் மக்கள் ஒப்புக்கொடுக்கும் பலிப்பொருளை ஏற்றுக் கொண்டதை ஒரு அடையாளத்தின் மூலம் வெளிப்படுத்தினார் அத்தோடு மக்களை தம்முடைய வாழ்வின் பங்காளிகளாகவும் மாற்றினார்.

பாஸ்காப்பலியில் குடும்ப உணவு (The family meal) பலிப் பொருளை கடவுள் ஏற்றுக்கொண்டதின் அடையாளமாக விளங்குகின்றது. உடன்படிக்கைப் பலியில் இரத்தத்தை தெளித்தலும், துன்புறும் ஊழியனைப் பொறுத்தவரையில் கடவுளால் மகிமைப்படுத்தப்படுதலும் பலிப் பொருளை கடவுள் ஏற்றுக்கொண்டதின் அடையாளமாக விளங்குகின்றது.

## கிறிஸ்துவின் இறப்பும், உயிர்ப்பும் - ஒரேபலி
## ( The Death and Resurrection of Christ, a Sacrifice)

எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தில் குறிப்பிட்டுள்ளது போன்று கிறிஸ்து எக்காலத்திற்குமாக தம்மை முழுவதுமாக பலியாக ஒப்புக் கொடுத்தார். இதனைவிட மேன்மையான பலி எதுவும் மீட்புவரலாற்றில் இல்லை. இப்பலி அவருடைய மரணம், உயிர்ப்பு என்பனவாகும். அனைத்து பழைய ஏற்பாட்டு பலிகளும் கிறிஸ்துவினுடைய இப்பலியை முன்குறித்துக் காட்டின. கிறிஸ்துவினுடைய மரணம் அவருடைய உயிர்ப்பிலிருந்து பிரித்து பாாக்க முடியாத ஒன்றாகும். இவை இரண்டும் ஒரே நிகழ்வு.

கிறிஸ்துவினுடைய இறப்பு பழைய ஏற்பாட்டு பலிகளின் நிறைவாக இருப்பதனால் கிறிஸ்துவினுடைய இறப்பும், உயிர்ப்பும உடன்படிக்கையின் சூழஅமைவுக்குள்ளேயே நோக்கப்பட வேண்டும். தம்முடைய இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றின் ஊடாக கிறிஸ்து புதிய உடன்படிக்கையின் இணைப்பாளராகின்றார்.

பழைய ஏற்பாட்டுப் பலியில் காணப்பட்ட பொதுத்தன்மைகளும் (Universal character) கிறிஸ்துவின் மரணம், உயிர்ப்பில் முழுமை பெறுகின்றது. கிறிஸ்து அனைவருக்காகவும் இறந்தார். அத்தோடு தம்முடைய உயிர்ப்பின் மூலம் அனைவருக்கும் பிரசன்னமாக இருந்து தெய்வீக வாழ்வின் ஊற்றாக விளங்குகின்றார். தொடர்ந்து கிறிஸ்துவின் இறப்பு உயிர்ப்பு ஆகியவற்றைத் தனித்தனியாகப் பார்ப்போம்.

## கிறிஸ்துவின் இறப்பு (The death of Christ)

கிறிஸ்துவினுடைய இறப்பு பழைய ஏற்பாட்டுப் பலிகளின் நிறைவாகும். " தந்தையே உம்கையில் என் ஆவியை ஒப்படைக்கின்றேன்" என்று கிறிஸ்து சிலுவையில் இருந்து கூறிய இறுதி வார்த்தைகள், இறைவன் தம்முடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவார் என்ற முழுமையான நம்பிக்கையில் ஆபிரகாம் தம்முடைய ஒரே மகனையே பலியிட முனைந்ததின் எதிரொலியாகும்.

"திருச்சட்டத்தின்படி எல்லாமே இரக்கத்தினால் தூய்மையாக்கப் படுகின்றன, இரத்தம் சிந்துதல் இன்றி பாவமன்னிப்பு இல்லை"
எபிரேயர் 9:22

கிறிஸ்துவின் இறப்பினை திருவிவிலியம் பலி (Sacrifice) என்னும் பொருள்படவே எடுத்துக்காட்டுகின்றது. கிறிஸ்துவின் இறப்பு ஒரு கொடை ஒரு தியாகக்கொடை (எபே. 5:2) மனித குலத்தினை பாவத்திலிருந்து விடுவிக்க கிறிஸ்து தன்னையே பலியாக்குகின்றார். இது கிறிஸ்துவில் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட புதிய உடன்படிக்கையாகும். இது கீழ்ப்படிவினதும், அர்ப்பணிப்பினதும் ஒரு செயலாகும்.

ஒரு பலி நிறைவேறுவதற்கு இரண்டு அம்சங்கள் முக்கியமானவை

ஒன்று - உள்ளார்ந்த மனநிலை ( interior attitude)

இரண்டு- வெளியார்ந்த அடையாளம் ( Exterior sign)

இவை இரண்டும் கிறிஸ்துவினுடைய இறப்பில் ஒருமித்து காணப்படுகின்றன. அதாவது கிறிஸ்து தன்னையே கொடுக்கும் உள்ளார்ந்த மனநிலை அவருடைய இரத்தத்தை சிந்துவதிலும், உடலைக் கையளித்தலிலும் வெளிப்படுத்தப்படுகின்றது. எனவே கிறிஸ்துவினுடைய இறப்பு ஒரு பலியாகும்.

## கிறிஸ்துவின் உயிர்ப்பு (The Resurrection of Christ)

கிறிஸ்துவின் இறப்பும், உயிர்ப்பும் ஒரே மறைநிகழ்வாக இருப்பதனால் கிறிஸ்துவின் உயிர்ப்பும் பலியின் மேன்மையைக் கொண்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் ஒவ்வொரு பலியும் கடவுளுக்கும், மனிதனுக்கும் இடையிலான ஒன்றிப்பை உள்ளடக்கியதாக இருக்கின்றது. கிறிஸ்துவினுடைய பலி பழைய ஏற்பாட்டின் நிறைவாக இருப்பதனால் கிறிஸ்துவினுடைய பலியும் இவ்வொன்றிப்பின் தன்மையைக் கொண்டுள்ளது.

மனிதனிற்கும், கடவுளிற்கும் இடையிலான இவ்வொன்றிப்புத்தன்மை பலிப்பொருளை கடவுள் ஏற்றுக்கொள்வதன் ஊடாக உணரப்பட்டது. கிறிஸ்துவினுடைய பலியைப் பொறுத்தவரையில் அவருடைய உயிர்ப்பு .கடவுளுடைய ஏற்புடமையாகும்., இவ்வேற்புடமையின் பயனாக:

– தாம் பெற்றுக் கொண்ட புதிய வாழ்வை அனைவருக்கும் கொடுப்பவர் ஆகின்றார் (1கொரி 15:45)

– கிறிஸ்து வல்லமையுள்ள இறைமகனாகின்றார். தந்தைக்கு கீழ்ப்படிதலின் மூலம் கிறிஸ்து நிலையான தந்தை மகன் உறவைக் கட்டி எழுப்புகின்றார்.

– இறைமகனாகிய கிறிஸ்து தம்முடைய உயிர்ப்பின் ஊடாக அனைவருக்கும் பிரசன்னமாக இருந்து அனைவரும் கடவுளுக்கு ஏற்புடையவர்களாக வாழத் தூண்டுகின்றார்.

## இறுதி இராவுணவு - ஒரு பலி
## ( The Last Supper of the Lord as a Sacrifice)



இறுதி இராவுணவின் பொழுது கிறிஸ்து உணவின் அடையாளத்தில் தம்மை முழுவதுமாக கையளிக்கின்றார். இறுதி இராவுணவில் தாம் செய்யப்போகும் நிகழ்வினை சீடர்களுக்கு விளக்கும் பொழுது "உடல்" (Body) "இரத்தம்" (Blood) என்ற சொற்பதங்களையே பயன்படுத்துகின்றார். இங்கு "உடல்" கிறிஸ்துவின் ஆள்தன்மையையும் "இரத்தம்" கிறிஸ்துவினுடைய உயிரையும் அடையாள முறையில் குறித்து நிற்கின்றன. இவ்வாறு அடையாள முறையில் இயேசு தம்மை முழுவதுமாக கொடுக்கின்றார். தம்மையே பலியாக்கும் கிறிஸ்துவின் உள்ளார்ந்த மனநிலை இறுதி இராவுணவின் போது சீடர்களுடன் உணவினை பகிர்ந்து உண்பதன் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது. இவ் உள்ளார்ந்த மனநிலை கல்வாரியில் சிலுவையில் இறப்பதன்

ஊடாக வெளிப்படையாக வெளிப்படுத்தப்படுகின்றது. சிலுவைப்பலிக்கும், இறுதி இராவுணவிற்குமான வேறுபாடு அடையாள வடிவில் மட்டுமே உள்ளது. ஒரே முழுமையான பலி இரண்டு வேறுபட்ட அடையாளத்தின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

இறுதி இராவுணவில் உணவை சீடர்களுடன் பகிர்ந்து கொள்ளும் போது கிறிஸ்து பயன்படுத்திய சொற்களும், சடங்குமுறைகளும் அவருடைய சிலுவைப்பலியை குறித்து நிற்கின்றன. அவர் இறுதி இராவுணவில் பயன்படுத்திய வார்த்தைகள் வழுவாத தாக்கம் கொண்டவையாக இருக்கின்றன. ஏனெனில் இறுதி இராவுணவில் கிறிஸ்து சிலுவையில் நிகழ்த்தப்போகும் பலியை நிகழ்த்துகின்றார்.

இறுதி இராவுணவு கிறிஸ்துவினுடைய முழுமையான கையளிப்பின் கொடுமுடியாக விளங்குகின்றது. அன்பே இவ்வனைத்து நிகழ்வினதும் உந்து சக்தியாக விளங்குகின்றது.

## திருப்பலி

திருப்பலி என்பது கிறிஸ்துவின் கல்வாரிப்பலியை மீண்டும் மீண்டும் பலிப்பீடத்தில் நிகழ்த்துவதாகும். அதாவது கிறிஸ்து கல்வாரி மலையில் தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தந்தையாம் இறைவனுக்கு மனமுவந்து பலியாக ஒப்புக்கொடுத்ததை நினைவு கூர்ந்து மீண்டும் செயல்படுத்துவதாகும்.

இப் பின்னணியிலேயே, கிறிஸ்துவோடு சேர்ந்து பலி செலுத்தும் குருவும் இறைமக்களும் தங்களது உடல், பொருள், ஆவி அனைத்தையும் இன்னும் சொல்லப்போனால் தங்களையே முழுமையாக கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கின்றனர்.



"அப்பம் பிட்குதலில் ஆண்டவரைக் கண்டு கொள்கிறோம்"
-லூயிஸ் ஈவர்-

திருநூலும், திருவழிபாட்டுப் பாரம்பரியமும் திருப்பலி என்ற இந்த இயேசுவின் பலியை மிக உயர்ந்ததாக - ஆபேலின் பலியைவிட, ஆபிரகாமின் பலியை விட, மெல்கிசதேக்கின் பலியை விட - சிறந்ததாகக் கருதுகின்றன. இது புதிய உடன்படிக்கையின் ஒரே நித்தியபலி என்றும் அழைக்கப்படுகிறது. இதன் வழியாகவே நமக்கு முடிவில்லா வாழ்வு உறுதியாகிறது. ஏனெனில் நற்கருணையாகிய இயேசுவின் உடலும், இரத்தமும் நமக்கு திருப்பலி வழியாகத்தான் கிடைக்கின்றன.

இது ஒரு மிகச் சிறந்த செபம், வழிபாடு. திருவழிபாட்டின் மையம் மண்ணக வழிபாடு எனப்படும், இது விண்ணக வழிபாட்டின் முன் சுவையாகும். இது மீட்புத் திட்டம் அனைத்தையும் தன்னுள் கொண்ட மிகச் சிறந்த அருட்சாதனம். இதை நாம் தொடர்ந்து நிகழ்த்த வேண்டுமென்று விரும்பியே இயேசு “இதை என் நினைவாகச் செய்யுங்கள்” என்று கட்டளையிட்டார். திருப்பலியே அனைத்தின் மையமாகவும் விளங்குகின்றது. இதனால்தான் மக்கள் இன்று “திருப்பலி மத்தி, மற்றதெல்லாம் அதைச் சுற்றி” என்று கூறுகின்றனர். இதனை இரண்டாம் வத்திக்கான் சங்கமும் “கிறிஸ்தவ வாழ்வு அனைத்திற்கும் ஊற்றும், உச்சியுமாக இருப்பது நற்கருணைப்பலியே” என்று கூறுகின்றது. (திருச்சபை இல.11, 2ம் வத். சங். ஏடுகள்)

## முடிவுரை

இறுதி இராவுணவு - கல்வாரிப் பலி - திருப்பலி ஆகிய இம் மூன்று நிகழ்வுகளும் மூன்று வேறுபட்ட அடையாளங்களின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டாலும் இம்மூன்றும் ஒரே நிகழ்வையே குறித்து நிற்கின்றன. அதாவது இறுதி இராவுணவின் போது அப்பத்தையும், இரசத்தையும் இயேசு தம் திரு உடலாகவும், இரத்தமாகவும் மாற்றி உண்ணக் கொடுத்து, இதை என் நினைவாகச்செய்யுங்கள் என்ற போது, தம் பாடுகள், மரணம், உயிர்ப்பின் நினைவை விட்டுச்சென்றார். திருப்பலி வேளையில் இந்த நீடித்த நினைவு கொண்டாடப்படுகின்றது. சீடருடன் இயேசு இராப்போசன வீட்டிலே இருந்த நினைவு, குரு அப்பத்தையும் இரசத்தையும் எடுத்து, தம் உடல் இரத்தமாக இயேசு அவற்றை மாற்றிய செயலைச் செய்யும் போது மீண்டும் நினைவு கூரப்படுகின்றது. மேலும் இயேசுவின் திரு உடலாகவும், இரத்தமாகவும் மாறிய அப்பத்தையும், இரசத்தையும் வானகத் தந்தைக்கு ஒப்புக் கொடுக்குமுன் இயேசு பாடுபட்டு, மரித்து, உயிர்த்ததையும், விண்ணகம் சென்றதையும் குருவானவர் இறைமக்களின் சார்பாக அன்போடு நினைவு கூருகின்றார். இவ்வாறு நற்கருணையை ஏற்படுத்தியதையும், அவர் இறந்து உயிர்த்ததையும் பசுமையான நிகழ்வாகக் கொண்டிருப்பது தேவநற்கருணை.



**சகோ. தே. செல்வரட்ணம்**

# நற்கருணைப்பலியும் நமது வாழ்வும்



ஆதி காலம் தொட்டு உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் மனிதன் அவனுடைய வாழ்க்கை முறைக்கும் சூழலுக்கும் ஏற்ப கடவுளை வழிபட்டு வந்துள்ளான். பூஜை செய்தல், பலிகொடுத்தல், யாகம் நடாத்துதல், தவம் செய்தல் போன்ற இறை வழிபாட்டு முறைகளை அவன் கைக்கொண்டு வந்துள்ளான். இவ்வழிபாடுகளில் தனது முதல் விளைச்சல், முதற்கனிகள், கொழுத்த தலைச்சன் கடாக்குட்டிகள் என உயர்வானவற்றையே இறைவனுக்கு அர்ப்பணித்துள்ளான். இவ்வாறு ஒன்றை இழப்பதன் மூலம் அதனிலும் மேலான ஒன்றை அடைதல் எனும் தத்துவத்தை அனுபவபூர்வமாகக் கண்டுள்ளான். பொதுவாகப் பலி கொடுத்தல் எல்லா வேதங்களிலும் கடவுளைத் திருப்திப்படுத்தும் சிறந்த வழிபாடாக இருந்து வந்துள்ளது. அக்காலத்தில் யூதர்களும் பல்வேறு பலி முறைகளையும் கைக்கொண்டு வந்துள்ளனர். மனுக் குலத்தின் மீது தமக்குள்ள அன்புறவைத் தெரியப்படுத்த இறைவன் இஸ்ராயேல் எனும் ஓர் இனத்தைத் தெரிந்து கொண்டார். நானூற்று முப்பது ஆண்டுகள் அடிமைப்பட்டிருந்த இஸ்ராயேலரை இறைவன் விடுதலை செய்தார். அவர்கள் விடுதலை அடைந்த இரவில் புளிப்பற்ற அப்பத்தையும் இறைச்சியையும் உண்டு இரத்தத்தைக் கதவு நிலைகளில் பூசி விடுமாறு மோயீசன் மூலம் அவர்களுக்குக் கட்டளை இட்டார். அந்த இரவில் இஸ்ராயேலர் உள்ள வீடுகளைக் கடந்து சென்று எகிப்தியரை இறைவன் தண்டித்தார். அந்த இரவையும் விருந்தையும் நினைவு கூரும் வகையில் பாஸ்கா விழா என இஸ்ராயேல் மக்கள் வருடா வருடம் கொண்டாடி வந்தார்கள். இறைவனின் அன்பு மக்களின் விடுதலைக்கு அடையாளமாகவும், நினைவாகவும், கொண்டாடப்பட்ட இப்பாஸ்காப்பலி விழாவிலே மனுக்குலத்தின் ஆன்மீக விடுதலைக்காக இறை அன்பின் உயர் வெளிப்பாடாக இறைமகன் யேசு தம்மைத்தாமே உயிர்ப்பலியாகத் தந்த கல்வாரிப் பலியின் முன் அடையாளமாகும்.

கிறிஸ்தவர்களாகிய நாமும் பல நூற்றாண்டு காலமாகத் திவ்விய பூசைப்பலியை (**Holy Mass**) எமது பிரதான வழிபாடாகக் கொண்டுள்ளோம். இன்று நற்கருணைப் பலி என வழங்கப்படும் இவ்வழிபாடு எமது கத்தோலிக்க திருச்சபையில் ஆரம்ப காலத்திலிருந்து பழக்கத்தில் உள்ளது. "ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடி வந்தார்கள்; பேருவகையோடும் எளிய உள்ளத்தோடும் வீடுகள் தோறும் அப்பத்தைப் பிட்டு, உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள்." (தி.ப 2:46)

இறைமகன் யேசு உலகிற்கு வாழ்வு தரும் உணவாகவும், தமது உயிர்த்தியாகத்தின் நினைவாகவும், இரத்தம் சிந்திப் பாடுபட்டு, மரித்து, உயிர்த்த தமது உடலின் பிரசன்னமாகவும், இறையன்பின் அடையாளமாகவும், இறைதந்தைக்கு, மகன், தம்மை முற்றுமுழுதாக கையளித்த கல்வாரிப்பலியின் புதுப்பித்தலாகவும், நற்கருணையை ஏற்படுத்தினார்.

உணவாக......அன்று கப்பர்நாவுமூர்க் கடற்கரையில் யேசு போதித்துக் கொண்டிருக்கையில், "விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே, இதை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார் எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன். அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன்" என்றும் "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்: மானிட மகனுடைய சதையை உண்டு அவருடைய இரத்தத்தை குடித்தாலொழிய நீங்கள் வாழ்வு அடைய மாட்டீர்கள்" என்றும் கூறினார். (யோவான் 6:51,53)

"நினைவாக.........அவர் பாடுபட முதல் நாள் இரவு..........."பின்பு அவர் அப்பத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி, அதைப்பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து, "இது உங்களுக்காக கொடுக்கப்படும் எனது உடல் இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்றார். அப்படியே உணவு அருந்திய பின்பு அவர் கிண்ணத்தை எடுத்து, "இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற எனது இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை........" என்றார். (லூக்கா 22:19,20) நற்கருணைப் பலியின் தோற்றம் இவ்வாறிருந்தது.

"இது உங்களுக்காக கொடுக்கப்படும் எனது உடல் இதை என் நினைவாகச் செய்யுங்கள்"

ஆதியில் இறைவனை வழிபடவும், நன்றி கூறவும், சாந்திப்படுத்தவும், வரம் பெறவும் ஒப்புக்கொடுக்கப்பட்ட பலி கிறீஸ்துவுக்குப் பின்

ஒரு புரட்சிகரமான மாற்றம் பெற்றது. நற்கருணைப்பலியில், பலி ஒப்புக்கொடுப்பவரும் கிறீஸ்துவே, பலிப்பொருளும் கிறிஸ்துவே, பலியைப் பெறுபவர் தந்தை இறைவன். அது மட்டுமல்லாமல் பலியின் நிறைவு மனித வாழ்வில் இணைக்கப்பட்டுள்ளது. நற்கருணைப்பலியின் உணர்வு மனிதனால் வாழப்படவேண்டும். அது ஒரு சடங்கு மட்டுமல்ல- வாழ்வின் ஊற்று. அதை ஏற்படுத்தி செயற்படுத்தி, நிறைவு செய்த கிறீஸ்துவின் வாழ்வு ஒரு முன்மாதிரிகையானதாக, பிறரன்பு, மன்னிப்பு, போன்ற உயர் விழுமியங்களைக் கொண்டதாக இருந்தது. அவருடைய ஆன்மீகம் உறவின் அடிப்படையில் அமைந்திருந்தது. எல்லோரையும் உறவு வாழ்வில் இணைத்துக் கொண்டார். எவரும் அவருக்கு விதிவிலக்கல்ல சாதி, சமய, இன, மொழி, பால் வேறுபாடுகளைக் கடந்தது யேசுவின் உறவு. கிறீஸ்தவர்கள் என எம்மைக் காட்டிக் கொள்ளும் நாம் கிறீஸ்தவ விழுமியங்களை வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். வெறுமனே திருப்பலிப் பூசையில் பங்குபற்றி நற்கருணை விருந்திலும் பங்கு கொள்வதுடன் எமது ஆன்மீகம் பூரணமடைவதில்லை.

> "நாம் அனைவரும் ஒரே உடலிலிருந்து சக்தி பெறுகிறோம்"
> –புனித ஜோன் கிறிசோஸ்தம்–

"பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்" என்று (மத்தேயு 9:13, 12:7) அன்று ஆண்டவர் யேசு மொழிந்தார். வெறும் சட்டங்களுக்கும் சம்பிரதாயங்களுக்கும் கட்டுப்பட்ட பரிசேயத்தனமான வாழ்க்கை முறையை ஒழித்துப் பொதுநலமும் சமூகஅக்கறையும், பிறர் வளர்ச்சியில் ஆர்வமும், சமூகத்தில் நிகழும் அவலங்களை அகற்றும் ஆர்வமும் - (முத்திப்பேறு பெற்ற அன்னை தெரேசாளின் பிறரன்புப் பணி) - கொண்டு அன்புப் பணி புரிய முயல்வோம்.

"நீதியை நாடித் தேடுங்கள் ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள். திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள். கைம்பெண்ணுக்காக வழக்காடுங்கள் ( எசா.1:17) எனும் இறைவாக்கினரின் கூற்று இன்றைய இறை மக்களுக்கு இறைவனால் விடப்படும் அறை கூவலே.

கிறீஸ்துவின் மீட்புப்பணி கல்வாரியோடு முடிவுறவில்லை. அவரால் ஏற்படுத்தப்பட்ட திருச்சபையின் மீட்புப்பயணம் உலகம் முடியும் வரை கிறீஸ்துவின் மறுவருகை வரை தொடரப்படும். திருச்சபையின் உறுப்பினராகிய எல்லாக் கிறீஸ்தவர்களும் நற்கருணைப்பலி விருந்தில்

தீமைக்குப் பதில் தீமை செய்யா தீர்கள், பழிச்சொல் கூறாதீர்கள், மாறாக ஆசி கூறுங்கள்

பங்குபற்றுவதோடு மட்டும் தமது ஆன்மீகத்தை வெற்றி கொள்வதில்லை. கிறிஸ்துவிற்காக எமது வாழ்வை அர்ப்பணிக்க முன்வர வேண்டும்.

"கிறீஸ்துவும் உங்களுக் காகத் துன்புற்று ஒரு முன் மாதிரிகையை வைத்துச் சென்றுள்ளார். எனவே நீங்கள் அவருடைய அடிச் சுவடுகளைப் பின்பற்றுங்கள். இதற்காகவே அழைக்கப்பட்டுள்ளீர்கள். *(1பேதுரு2:21).* "சிலுவையின் மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார். நாம் பாவங்களுக்கு இறந்து நீதிக்காக வாழ்வதற்கே இவ்வாறு செய்தார். அவர்தம் காயங்களால் நீங்கள் குணமடைந் துள்ளீர்கள் *(1பேதுரு2:24)* எனும் இறைவாக்கினரின் அருள்மொழிக்கேற்ப கிறீஸ்தவர்கள் யாவரும் அவர் வழியைப் பின்பற்றி அன்புப்பணிபுரிய வேண்டும். புனிதர்களுடைய வாழ்க்கை முறை எமக்கு ஒரு முன் மாதிரிகையாக இருக்கட்டும்.

"இறுதியாக நீங்கள் அனைவரும் ஒருமனப்பட்டிருங்கள். பிறரிடம் இரக்கமும் சகோதர அன்பும் பரிவுள்ளமும் மனத்தாழ்மையும் கொண்டிருங்கள். தீமைக்குப் பதில் தீமை செய்யாதீர்கள், பழிச்சொல் கூறாதீர்கள், மாறாக ஆசி கூறுங்கள். ஏனென்றால் கடவுள் வாக்களித்த ஆசியை உரிமையாக்கிக் கொள்வதற்கே அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்" எனும் *(1பேதுரு 3:8)* இராயப்பரின் அறிவுரைப்படி நடக்கப் புனிதர் களுடைய வாழ்க்கைமுறை எமக்கு ஒரு முன்மாதிரிகையாக இருக் கட்டும். தவ முயற்சிகளாலும் பிறரன்புச் சேவையாலும் தீய இச்சைகளை அடக்கிப்பாவத்திலிருந்து விடுபட்டு, கிறிஸ்துவின் பாடுகளை நினைவு கூர்வதிலும், புனித அன்னை மரியின் நன் மாதிரிகையைப் பின்பற்றி, பிரமாணிகத்துடன் வாழ்வதிலும் நாட்டம் கொள்ள, நாம் முயற்சிப்போம். நாங்கள் பலி விருந்தில் பங்குகொள்வதால் மண்ணுலகிற்கு உரியவற்றை ஞானத்துடன் நோக்கவும் விண்ணுலகிற்குரியவற்றை விருப்புடன் நாடவும் பிண்ணக வேந்தனை வேண்டுவோமாக. "கிறீஸ்துவின் இரத்தம் வெல்லும்"



**ம. ஞானசேவியர்**

# நற்கருணைப் பணியாளர்



இறைத்தந்தை தம் மீட்புத் திட்டத்தைச் செயற்படுத்த மனிதர்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களூடாகச் செயலாற்றி வருவதை மீட்பு வரலாற்றில் காண முடிகிறது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலும், கிறிஸ்துவுக்கு பிற்பட்ட காலத்திலும் பல பணியாளர்களைத் தேர்ந் தெடுத்தும் அவர்களூடாக வேறு உதவிப்பணியாளர்களை ஏற்படுத்தியும் இறைவன் மக்களுக்கு பணியாற்றி வருகின்றார். இறைத்தந்தையால் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட இயேசுவின் காலத்திலும், அவரது பணியை தொடர்ந்தாற்றிய திருத்தூதர்களின் காலத்திலும், திருச்சபை வரலாற்றிலும் பல பணியாளர்கள் இறைமக்களுக்கு பணியாற்றி வந்துள்ளனர்.

## இயேசுவின் பணியில் பங்காளிகள்

இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் அவர் நகர்கள், சிற்றூர்கள் எல்லாம் சுற்றி வந்தார். எங்கும் அவர்களுடைய தொழுகைக் கூடங்களில் கற்பித்தார். விண்ணரசைப்பற்றிய நற்செய்தியை பறை சாற்றினார். நோய் நொடிகள் அனைத்தையும் குணமாக்கினார். திரண்டிருந்த மக்களை அவர் கண்டபோது அவர்கள் மேல் பரிவு கொண்டார். அவர்கள் ஆயர் இல்லா ஆடுகளைப் போல் அலைக்கழிக்கப்பட்டுச் சோர்ந்து காணப்பட் டார்கள். அப்போது இயேசு தம் சீடரை நோக்கி "அறுவடையோ மிகுதி வேலையாள்களோ குறைவு, ஆகையால் தேவையான வேலையாள்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்" என்றார் (மத் 9:37-38). இயேசு இவ்வாறு கூறியது மாத் திரமல்ல, பன்னிரு சீடர்களைப் பணிக்குஅழைத்து "தீய ஆவிகளை ஓட்டவும், நோய் நொடிகளை குணமாக்கவும் அவர்களுக்கு அதிகாரம் அளித்தார்"(மத்:10:1) சீடர்களும் பல இடங்களுக்கு சென்று பணி புரிந்தார்கள்.

## திருத்தூதர் வாழ்வில் துணையாளர்கள்

இவ்வாறு திருத்தூதர்கள் பணியாற்றிய போது கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு சீடராகுபவர்களின் எண்ணிக்கை பெருகி வந்தது.

பன்னிரு திருத்தூதரும் சீடர்களை ஒருங்கே வரவழைத்து "அன்பர்களே உங்களிடமிருந்து நற்சான்று பெற்றவர்களும், தூயஆவி அருளும் வல்லமையும் ஞானமும் நிறைந்தவர்களுமான எழுவரைக் கவனமாய்த் தேர்ந்தெடுங்கள். அவர்களை நாம் இந்தப் பணியில் நியமிப்போம்" என்று கூறினார் திப. 6:3) திரளாய் கூடியிருந்த சீடர் அனைவரும் இக்கருத்தை ஏற்றுக்கொண்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தொண்டர்கள் பல இடங்களிலும் பணிபுரிந்து திருத்தூதர்களுக்குத் துணையாகச் செயற்பட்டனர்.

திருத்தூதரான பவுல் தம் தூதுரைப்பயணங்களின் போது தம் கூட பல பணியாளர்களைச் சேர்த்துக்கொண்டு பணிபுரிந்தார் என்பதைத் திருத்தூதர் பணி நூலில் காண, முடிகின்றது.

## திருச்சபை வரலாற்றில்

திருச்சபையின் வரலாற்றில் தொடக்க காலத்திலிருந்தே பல வகையான திருப்பணிகள் பலரால் ஆற்றப்பட்டு வந்திருப்பதை அறிய முடிகிறது. திருவழிபாட்டு வேளைகளில் திருப்பணி புரிபவர்கள் பலர். பொதுவாக ஆயர் அவர்களே திருவழிபாட்டுக்கு தலைமை தாங்கி நடாத்துபவர்.

ஆயருக்கு துணையாக தியாக்கோன், வாசகர், பீடத்துணைவர், நற்கருணைப்பணியாளர், பாடகர், இசைக்கருவி மீட்டுபவர், விளக்கவுரை சொல்லுபவர் எனப் பலர் பணிபுரிகின்றனர். இந்த வரிசையில் நற்கருணைப் பணி புரிபவர்கள் பற்றிய விடயத்தை விளக்கமாக காண்போம்.

சாதாரண நற்கருணைப் பணியாளராகச் செயற்படுபவர்கள் ஆயர், குரு, தியாக்கோன் என்பவர்களே. நற்கருணை வழங்குவதற்குப் போதிய திருப்பணியாளர் இல்லாத போது அனுமதிக்கப்பட்ட பொதுநிலையினர் நற்கருணைப் பணியாளராகச் செயற்படலாம் என்று திருச்சபைச் சட்டம் 910,230 ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளது.

## திருச்சபை அலுவல்களில், பணிகளில் பொதுநிலையினர்

"பொருத்தமானவர்களெனக் கண்டறியப்பட்டுள்ள பொதுநிலையினர் சட்ட விதியமைப்புகளுக்கு ஏற்ப தாங்கள் ஆற்றக்கூடிய திருச்சபை அலுவல்களையும், பணிகளையும் தங்கள் திருமேய்ப்பர்களிடமிருந்து ஏற்றுக் கொள்வதற்கான தகுதி பெற்றுள்ளனர்" (தி.ச. 228 பிரிவு 1) இது ஒரு முக்கியமான சட்டம். இதற்கு முன்பு இது போன்ற சட்டம் திருச்சபையில் இருந்ததில்லை. பொதுநிலையினர் ஏற்கக்கூடிய பொறுப்புக்

களை இச்சட்டம் இரண்டு வகையாக பார்க்கின்றது. ஒன்று அலுவல்கள், மற்றொன்று பணிகள்.

## திருச்சபை அலுவல்கள்

திருச்சபை அலுவல்கள் என்பது ஓர் ஆன்மீக நோக்கத்தைச் செயற்படுத்துவதற்காக இறைவனுடைய அல்லது திருச்சபையினுடைய ஏற்பாட்டினால் நிலையான முறையில் நிறுவப்பட்ட ஒரு பணியாகும். முன்பு திருச்சபை அலுவல்களை பெரும்பாலும் குருத்துவத் திருநிலை அருட்சாதனத்தைப் பெற்றவர்கள் மட்டுமே செய்து வந்தனர். இப்பொழுது திருப்பட்ட அதிகார இயல்பு தேவைப்படும் அலுவல்கள் மட்டுமே திருப்பட்டத்தினருக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக ஆயர், பங்குத்தந்தை, குருமுதல்வர், திருச்சபை நீதிமன்ற முதல்வர் போன்ற அலுவல்களைக் குருத்துவத்திருப்பட்டம் பெற்றவரே ஏற்கலாம். திருப்பட்ட அதிகார இயல்பு தேவையில்லாத பல அலுவல்களைத் திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் பெற்ற பொதுநிலையினர் ஆற்றலாம். எடுத்துக்காட்டாக, மறை மாவட்ட அலுவலகச்செயலர், எழுத்துப்பதிவாளர், நிதிநிர்வாகி, பாடசாலைகள், தொழிற்பயிற்சிக்கூடங்களின் தலைமை ஆசிரியர்கள், மற்றும் நிறுவனங்களின் இயக்குனர்கள், பங்கு நிர்வாகி, குருமடங்களில் இறையியல் பேராசிரியர்கள், ஆணைக்குழுவின் செயலர்கள், திருச்சபை நீதிமன்றத்தின் எழுத்துப்பதிவாளர்கள், வழக்குரைஞர்கள், பிணைக் காப்பாளர், நீதிநெறியாளர், வழக்கு விசாரிப்பவர், மற்றும் நடுவர் ஆகியோர் இதில் அடங்குவர் (தி.ச. 517, பிரிவு 2).

## திருச்சபையின் பணிகள்

திருமேய்ப்பர்கள் தாங்களே இதுவரையில் ஆற்றி வந்த திருப்பட்ட அதிகார இயல்பு தேவையில்லாத பல பணிகளைத் தகுதி வாய்ந்த பொதுநிலையினருக்கு வழங்கலாம் என்று சட்டம் கூறுகின்றது (தி.ச. 230). இப்பணிகள் நிறுவப்பட்ட பணிகள் என்றும், சாதாரண பணிகள் என்றும் உள்ளன. முதல் வகைப்பணிகள் வழக்கமாக அவற்றிற்கென உள்ள திருச்சடங்குகளை நிறைவேற்றி அளிக்கப்படுபவை. இரண்டாம் வகைப் பணிகள் பொதுநிலையினர் திருமேய்ப்பர்களின் நியமனத்தால் பெற்றுக்கொள்வர். இந்த இரண்டு வகை பணிகளையும் தற்காலிகமாகவோ அல்லது நிலையான வகையிலோ பொதுநிலையினருக்கு வழங்கலாம்.

தற்பொழுது நிலையான பணிகளாகத் திருப்பலியில் இறைவார்த்தை வாசகர், பீடத்துணைவர் ஆகிய இரு பணிகளும் உள்ளன. நிலையான பணிகளைத் தேவைக்கேற்ப நிறுவிக் கொள்ள ஆயர்கள் பேரவைக்கு உரோமை திருஆட்சிப்பீடம் அனுமதி வழங்கியுள்ளது. பொதுநிலையினர்

தற்காலிகமாக, ஆற்றக்கூடிய பணிகள் திருச்சபைச் சட்டத்தில் ஏராளமாக வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சில:

- வழக்கமான திருப்பணியாளர் ( ஆயர், குரு, திருத்தொண்டர்) இல்லாத பொழுது ஆயர் அனுமதியுடன் திருமுழுக்கு அருட் சாதனத்தை வழங்குதல் (தி.ச.861 பிரிவு 2)
- போதுமான திருப்பட்டத்தினர் மற்றும் பீடத்துணைவர் கிடைக்காத பொழுது திருப்பலியில் இறைமக்களுக்குத் திரு உணவு வழங்குதல் ( தி.ச 910 பிரிவு 2, தி.ச 230 பிரிவு 3).
- அது போல நோயுற்றோருக்கும் முதியோருக்கும் நற்கருணை எடுத்துச் சென்று வழங்குதல் – இது தொடக்க கால கிறிஸ்தவர்கள் மத்தியில் இருந்துள்ளது.
- தேவைப்படின் இறக்கும் தறுவாயில் இருப்போருக்கு இறுதிப் பயண உணவை எடுத்துச் சென்று வழங்குதல் (தி.ச 911 பிரிவு2).
- மறைஆயரின் விதிகளுக்குட்பட்டு திவ்விய நற்கருணை ஆரா தனைக்குத் திருஅப்பத்தை ஸ்தாபகம் செய்தல் (தி.ச. 943).
- குழந்தைகள் திருமுழுக்கிற்கு முன் பெற்றோருக்கு கற்பித்தல், உறுதிப்பூசுதல், முதன்நன்மைக்கு சிறுவர், சிறுமியரை ஆயத்தம் செய்தல், திருமணத்திற்கு முன் இளைஞர், இளம்பெண்களை தயாரித்தல் (தி.ச. 843 பிரிவு 2, 867 பிரிவு 2 890, 914, 1064), போன்ற திருச்சபை பணிகளை பொதுநிலையினர் ஆற்றுவதற்கு புதிய திருச்சபை சட்டங்கள் இடமளிக்கின்றன.

## ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்வில் நற்கருணைப்பணி

தொடக்க காலத் திருச்சபையில் கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டோரின் வாழ்க்கை முறையைப் பாாக்கும் போது “அவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும், அப்பம் பிடுதலிலும், இறைவேண்டலிலும், உறுதியாய் நிலைத்திருந்தார்கள்” (தி.ப. 2:42) என்று திருத்தூதர் பணி நூல் கூறுகின்றது. ஆதிக்கிறிஸ்தவர்களிடம் ஒரு மனப்பட்ட நிலை, உடைமைகளைப் பகிர்ந்து கொள்ளல், அப்பம் பிடுதல் முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது. நற்கருணை மைய வாழ்வாக அமைந்தது. நற்கருணை அவர்களின் வாழ்விற்கு ஊட்டமளித்தது.

உயிர்த்த ஆண்டவர் இயேசுவின் பிரசன்னத்தை சபை ஒருமைப் பாட்டிலும், நற்கருணையிலும் கண்டுணர்ந்து கொண்டனர். “இதோ உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்”(மத். 28:20).

என்று கூறிய ஆண்டவர் இயேசுவின் பிரசன்னம் தம்மோடு இருக்கின்றது என நம்பினார்கள். அது மட்டுமல்ல அப்பம் பிடும் போது கல்வாரியில் நிகழ்ந்த பாவப்பரிகாரப்பலி தம் மத்தியில் தொடர்ந்தும் நிகழ்வதையும் இறுதி இராவுணவு வேளையில் இயேசு தம் உடலையும் இரத்தத்தையும் உணவாகவும், பானமாகவும் கொடுத்த அதே விருந்தில் தாம் பங்குகொள்வதாகவும் நம்பினார்கள். அந்த நம்பிக்கையினால் கிறிஸ்துவை தம் வாழ்வில் கொண்டிருந்தார்கள். அதனால் தான் அவர்கள் கிறிஸ்து+அவர்கள் எனப் பிறரால் அழைக் கப்பட்டார்கள். ஏனைய மக்களும் அவர் களுடன் சேர்ந்துகொள்ள முன்வந்தார்கள். கிறிஸ்து தம்மையே உடைத்து பிறர் வாழத் தம்மைப் பலியாக்கியதுபோல அவர்களும் நற்கருணைப்பலியை-பணியைத் தொடர்ந்து ஆற்றினார்கள். நற்கருணைப்பந்தியில் பங்குகொள்ள முடியாமல் இருக்கும் நோயாளர்கள், வயோதிபருக்கு வீடுகளுக்கு நற்கருணையை எடுத்துச் சென்று வழங்கினார்கள். இவ்வாறாக ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்வில் ஆண்டவர் இயேசுவின் பிரசன்னத்தைக் கொண்டதாக - பலி வாழ்வை உடையதாக - விருந்தில் ஒற்றுமை சகோதரத்துவத்தைக் கொண்ட நற்கருணைப் பணி வாழ்வாக அமைந்திருந்தது. இத்தகைய நற்கருணைப் பணி திருச்சபையில் தொடர்ந்தும் இடம் பெற்று வந்துள்ளமை வரலாறாகும்.

> **அப்பம் பிடும் போது கல் வாரியில் நிகழ்ந்த பாவப் பரிகாரப்பலி தம் மத்தியில் தொடர்ந்தும் நிகழ்வதையும் இறுதி இராவுணவு வேளையில் இயேசு தம் உடலையும் இரத்தத்தை யும் உணவாகவும், பானமா கவும் கொடுத்த அதே விருந்தில் தாம் பங்கு கொள்வதாகவும் நம்பி னார்கள்.**

## இன்றைய தேவை

மறைஅறிவுப்புப்பணி இன்னும் மேற்கொள்ளப்பட வேண்டிய பல நாடுகளில் நற்செய்தி அறிவிப்புப் பணி மூலம் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட மக்களின் ஆன்மீகத் தேவைகளைக் கவனிக்கப் பணியாளர்கள் பற்றாக்குறை உண்டு. இத்தகைய நிலையில் பொதுநிலைப்பணியாளர்கள் தம் நிலைக்கேற்ப பணியாற்ற திருச்சபைச் சட்டம் வழிவகுத்துள்ளது. ஆசிய நாடுகள் சிலவற்றில் பொதுநிலையினர் நற்கருணைப் பணியாளர் களாக பணியாற்றி வருகின்றனர்.

எமது நாட்டிலுள்ள மக்களின் தொகைக்கேற்ப திருப்பணியாளர்கள் போதியளவு இல்லாத காரணத்தினால் பொதுநிலையினரில் தகுதியான வர்கள் திருச்சபையின் பணிகளில் பங்குபெற வேண்டிய தேவை உண்டு.

பல பங்குகளில் பங்குத்தந்தையர்கள் இரண்டு அல்லது மூன்று திருப்பலிகள் வெவ்வேறு ஆலயங்களில் ஒப்புக்கொடுக்க வேண்டியுள்ள தால் நற்கருணை வழங்குவதில் நேரத்தை மீதப்படுத்த நற்கருணைப் பணியாளர்கள் உதவி புரிவது தேவையாக உள்ளது. எனவே இலங்கை ஆயர் மன்றம் பொதுநிலையினரில் தகுதியானவர்களை நற்கருணைப் பணியாளராக பணியாற்ற அனுமதித்துள்ளது.

## பணிக்கு தகுதி பெறல்


பொதுநிலையினர் திருச்சபையின் அலுவல்களையும், பணிகளையும் ஆற்ற வேண்டுமெனில் அதற்கான தகுதி பெற்றிருத்தல் வேண்டும். இது அவர்களின் தன்னுரிமை என்றும் தி.ச. 224ல் கூறப்பட்டுள்ளது. "நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ திருச்சபையின் ஒரு சிறப்புப் பணிக்கும் பொதுநிலையினர் தங்களுடைய பணியை உரிய முறையில் நிறைவேற்றவும், இப்பணியை மனச்சான்றின்படி ஆர்வத்துடன் செயல் படுத்தவும் தேவையான பயிற்சி பெறவும் கடமைப்பட்டுள்ளனர். இவ்வாறு கல்வியும், பயிற்சியும் பெற விரும்பும் பொதுநிலையினருக்குத் தேவையான வசதி செய்து கொடுப்பது திருமேய்ப்பர்களின் பொறுப்பு என்று திருச்சபை சட்டம் கூறுகிறது (தி.ச. 811).

யாழ் மறைமாவட்டப் பங்குகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுநிலையினருக்கு நற்கருணைப்பணிக்கென சிறப்பான கல்வியும், பயிற்சியும் அளித்துவருவது புதிய ஒரு முயற்சியாகும். இவ்வாறான செயல்பாடுகளில் பங்குகொள்ள பொதுநிலைத்தன்னார்வப்பணியாளர்கள் முன்வரவேண்டும். நற்கருணைப்பலியென்பது திருப்பந்தியில் கிறிஸ்து வின் திரு உணவைப் பரிமாறுவதுடன் மட்டுமல்ல நோயுற்றவர், முதியோர் ஆகியவர்களைத் தேடிச் சென்று அவர்களைச் சந்தித்து உறவாடல், திருஉணவைப் பெற்றுக்கொள்ள தயாரித்தல்களும் உள்ளடங்கும். நற்கருணைப்பணியாளர் தன்னைத் தியாகம் செய்வதும், தன் நேரத்தை, ஆற்றல் திறமைகளை பகிர்ந்து கொள்ளுதல், நற்கருணையின் தன்மையாகிய அன்புறவை, ஐக்கியத்தை குடும்பங்களில், சமூகத்தில் கட்டி வளர்ப்பதும் அதன் ஊடாக கிறிஸ்தவர்கள் மத்தியில் கிறிஸ்துவின் ஒன்றிப்பின் பிரசன்னத்தை நிலைப்பெறச் செய்வதும் நற்கருணைப் பணியேயாகும்.



**கி. சா. பங்கிராஸ்**
**மறையாசிரியர்**

# அண்மைக்கால நற்கருணை அதிசயங்கள்




அப்பமும், இரசமும் திருப்பலியில் வசீகர மன்றாட்டு வேளையிலேயே கிறிஸ்துவின் உடலாகவும், இரத்தமாகவும் மாறுவதைத் கத்தோலிக்க திருச்சபை தனது போதனைகளில் கற்பிக்கின்றது. திருச்சபை வரலாற்றிலே விசேடவிதமாக விசுவாசக் குறைவு, மறைமறுப்பு அதிகமாக காணப்பட்ட காலங்களில் நற் கருணையில் கிறிஸ்துவின் உயிருள்ள பிரசன்னத்தை வெளிப்படுத்து வதற்குப் புலன்களால் அறிந்து கொள்ளக்கூடிய பல புதுமைகள் இறைவனால் அருளப்பட்டன. இப்புதுமைகளில் அப்பம், இரசம் ஆகிய வற்றில் மறைந்துள்ள கிறிஸ்துவின் உடலும், இரத்தமும் மனித புலன் களால் தொட்டு, சுவைத்து உணரக்கூடிய விதமாக வெளிப்படுத்தப்பட்டன. 'யூவான் கரோல் குருஸ்' (Joan Carroll Cruz) என்பவர் "நற்கருணை புதுமைகள்" (Eucharistic Miracles) என்னும் நூலில் திருச்சபை வரலாற்றில் 8ம் நூற்றாண்டில் லான்சியானோவிலிருந்து (இத்தாலி) 1970, ஸ்ரிச்சுக்கும் (பவேரியா) இடைப்பட்ட பல இடங்களில் இடம்பெற்ற 36 பெரியளவிலான நற்கருணை புதுமைகளை விபரிக்கின்றார். இவர், உடலாகவும், இரத்தம் வடிகின்ற விதமாகவும் மாறிய அப்பத்தையும், புனிதப்படுத்தப்பட்ட வேளையில் இரத்தமாக மாறிய இரசத்தையும் பற்றி பலவற்றைக் கூறுகின்றார்.

1988ம் ஆண்டு மே மாதம் தொடக்கம் இன்றுவரை தென் கொரியாவில் 'நாயு' (Naju) என்கின்ற இடத்தில் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்ற நற்கருணை புதுமைகள் கத்தோலிக்க திருச்சபையின் போதனைகளுக்கு சான்று பகர்வதற்காக கடவுளால் அருளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. புனித கன்னிமரியாளும், கிறிஸ்துவும் யூலியா கிம் என்பவருக்கு பல தடவைகள் தோன்றி, அவரூடாக பாவப்பட்ட மக்களினத்தின், கடவுளை நோக்கிய மனமாற்றத்திற்கான அவசர அழைப்பை பல அடையாளங்களூடாக வழங்கினார்கள்.

யூலியா கிம் 1947ல் பிறந்தார். இவர் 1972ல் நாயு பட்டணத்திலே விவசாய திணைக்களத்தில் பணிபுரியும் யூலியோ கிம் என்பவரை திருமணம் புரிந்து கொண்டார். இவர்களுக்கு இரண்டு ஆண்பிள்ளைகளும், இரண்டு பெண்பிள்ளைகளும் இருக்கின்றனர். யூலியா புரட்டஸ்தாந்து மதத்தை சேர்ந்த ஒரு பெண். இவர் புற்றுநோயிலிருந்தும் ஏனைய பல நோய்களிலிருந்தும் அற்புதமாக குணமாக்கலை பெற்றபின் கத்தோலிக்க மதத்தை தழுவிக் கொண்டார். இதன் பின் இவர் தனது செபவாழ்விலே அதிகம் ஆர்வம் கொண்டார். ஒரு நாள் அதிகாலை 3 மணியளவில் யூலியா யேசுவை காட்சியாகக் கண்டார். அக்காட்சியிலே மனித பாவத்தினால் கிழிக்கப்பட்ட யேசுவின் இதயத்திலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. இதனால் மிகவும் ஆட்கொள்ளப்பட்ட அவர், உலகத்தின் பாவங்களுக்கு தனது வாழ்வைப்பரிகாரவாழ்வாக்க உறுதிகொண்டார். இவர் அற்புதமான முறையிலே கடுமையான துன்பத்தை அனுபவித்தார். அத்துடன் திருக்காயங்களையும் தனது உடலிலே பெற்றுக்கொண்டார். இக்காயங்கள் பலநாட்கள் தொடர்ந்து காணப்படும். பின்பு குறிப்பிட்ட காலத்தில் மறைந்து மீண்டும் தோன்றும்.

1985 யூன் 30ல் யூலியா தனது அறையில் உள்ள மரியாளின் சொரூபம் கண்ணீர் வடிப்பதை முதல் முறையாகக் கண்டார். 1986 ஒக்டோபர் 19ல் கண்ணீர்த்துளிகள் இரத்தமாக மாறியது. 1992 ஜனவரி 14 வரை 700 நாட்கள் தொடர்ந்து கண்ணீரும், இரத்தமும் வெளிவந்து கொண்டிருந்தன. இரத்தம் சோல் (Seoul) பல்கலைக்கழகத்தில் உள்ள மருத்துவ பீடத்திலே பரிசோதிக்கப்பட்டு அது உண்மையான மனித இரத்தம் என உறுதிப்படுத்தப்பட்டது. 1992 நவம்பர் 24 தொடக்கம் 1994 ஒக்டோபர் 23 வரை 700 நாட்களுக்கு நறுமண தைலம் அந்த சொரூபத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்தது. அத்துடன் நறுமணம் கமழும் ஆடை ஒன்றும் மரியாளினால் யூலியாவிற்கு கொடுக்கப்பட்டது. இதனால் அவளை சுற்றி எந்த வேளையிலும் ரோஜாவின் நறுமணம் வீசிக்கொண்டிருந்தது. இவருடைய செப வேளையிலே பல உடல் ரீதியான குணமாக்கல்கள் இடம்பெற்றன. எண்ணிலடங்காத மக்கள் ஆன்மீக மனமாற்றங்களையும், பாவ வாழ்விலிருந்து மனம் மாறி அருட்சாதனத்தை தேடிச் சென்றதையும், தங்களின் உள்ளத்தில் உண்மையான அன்பையும் அமைதியையும் அநுபவித்ததையும் உணர்ந்து கொண்டார்கள்.

மீட்பு வரலாற்றிலே மரியாள் அவளுடைய பிள்ளைகள் மட்டில் காட்டும் தாய்க்குரிய அன்பையும் கரிசனையையும் யாரும் மறுத்துவிட முடியாது. எமது குறைவான விசுவாசத்தை வலுப்படுத்தவும், விசேட

விதமாக நற்கருணையில் கிறிஸ்துவின் உயிருள்ள பிரசன்னத்தை நாம் விசுவசிக்கவும், மரியாளை சிறந்த ஒரு கருவியாக கடவுள் பயன் படுத்துகின்றார். 1988 மே முதல் இற்றைவரைக்கும் பல தடவைகளில் அப்பவடிவிலான நற்கருணை யூலியாவின் நாக்கிலிருந்து அனைவரும் பார்க்கக்கூடிய வகையில் கிறிஸ்துவின் உடலாகவும் இரத்தமாகவும் மாறிக்கொண்டிருக்கின்றது. இவைகளைவிட ஆலயத்தினுள் பல தடவைகள் பரிசுத்த நற்கருணை கீழ்நோக்கி வந்த அதிசயமும் நடைபெற்றது. இப்புதுமைகள் எல்லாம் மனித நாட்டத்தினாலும் பொருள் முதல்வாதசிந்தனையினாலும் சிதைந்து போய்க் கொண்டிருக்கின்ற நற்கருணைமட்டிலான பக்தியையும் விசுவாசத்தையும் வலுப்படுத்து வதற்காக அருளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. விளைவாக, நற்கருணை கிறிஸ்துவின் சின்னம் என்கின்ற கண்ணோட்டம் உலகெல்லாம் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

1986 ஒக்டோபர் 31ல் மரியாளினால் யூலியாவிற்கு இன்னுமொரு காட்சி அருளப்பட்டது. அந்தக் காட்சியில் எண்ணிலா மக்கள் தமது பாவ வாழ்வுடனே நற்கருணையை உட்கொண்டு தேவதுரோகம் என்கின்ற பாவத்தையும் சேர்த்து கட்டிக் கொள்கின்றார்கள். 1987 யூன் 15ல் மரியாள் யூலியாவிற்கு ஒரு செய்தியை கூறினாள். அதில், யேசு தனது உடலாலும் இரத்தத்தாலும் நாம் ஊட்டம் பெறவும், அவருடன் இணைந் திருக்கவும், இறப்பின் பின் எமது உடல் உயிர் பெறவும் நற்கருணையை ஏற்படுத்தினார். நாம் அதிசயமான இந்த அருட்சாதனத்தை புகழவேண்டும். ஆனால் பல ஆன்மாக்கள் ஒப்புரவு அருட்சாதனத்தை பெறாமல் தூய்மையற்றவர்களாக மாறிக் கொண்டிருக்கின்றார்கள், என்று தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து 1991 மே 16ல் கிறிஸ்து யூலியாவிற்கு தோன்றி பல ஆன்மாக்கள் நற்கருணையில் இறைபிரசன்னத்தை உண ராமல் தேவ துரோகத்தினால் தன்னை அவமானப்படுத்தி, நன்றியில்லா தன்மையினால் தன்னை புறம்தள்ளுகிறார்கள் என்ற செய்தியை கூறினார்.

நற்கருணையில் இறைபிரசன்னத்தை மறுப்பதனாலும், அதிகமான பாவங்களை செய்வதனாலும் உலகமானது ஆன்மீக ஒழுக்கவிடயங்களில் இறைவன் முன்னிலையில் மிகவும் கடன்பட்ட நிலைக்கு வந்து கொண்டி ருக்கின்றது. இந்த நிலையானது மிகவும் பெரிய அளவிலான ஒருமன மாற்றத்திற்கான அழைப்பை அனைவருக்கும் விடுக்கின்றது. நாயுவில் மரியாளின் பணியானது நற்கருணையில் இறைபிரசன்னத்தின் உண் மையை நோக்கியும் திருச்சபையூடாக இறைவன் ஆற்றும் மீட்புத் திட்டத்தை நோக்கியும் மக்கள் அனைவரையும் தட்டியெழுப்புவதாக அமைகின்றது.

நற்கருணையின் ஊற்றாகிய கிறிஸ்துவை நோக்கி எம்மை அழைத்து செல்வதற்காகவே மரியாள் வருகிறாள். கிறிஸ்தவ வழிபாட்டின் மையமாகவும் எமது ஆன்மீக உணவான நற்கருணையின் மையமாகவும் உள்ள திருப்பலியின் முக்கியத்துவம் பற்றிய சரியான விசுவாசத்திற்கு புத்தூட்டம் அளிப்பதே மரியாளின் விருப்பம். இதன் காரணமாகவே மரியாள் தொடர்ந்தும் பலவிதமான நற்கருணை புதுமைகளை கொண்டு வருகிறாள். 1993 ஏப்ரல் மாதத்திலிருந்து யூன் வரையான காலப் பகுதியில் அவளுடைய சொரூபத்துடன் திரு அப்பமும் இரசக்கிண்ணமும் உள்ள புதுமையான புகைப்படத்தை அருளினாள். 1988ல் இருந்து 1997 வரையான காலப்பகுதியில் 17 தடவைகள் யூலியாவினூடாக நற்கருணை புதுமைகள் இடம்பெற்றன. பெரும்பாலானவை நாயுவிலும், சில புதுமைகள் யூலியா உரோமைக்கு சென்ற வேளையில் அங்கும், ஹவாய் தீவிலும், கிழக்கு மலேசியாவில் சிபு என்கின்ற இடங்களிலும் இடம்பெற்றன. இவைகளில் அதிகமானவை வெண்மையான அப்பம் யூலியாவின் நாக்கிலே கிறிஸ்துவின் இதயம் போல் உயிருள்ள தசையாக மாறி அதிலிருந்து இரத்தம் வருவதாகவே அமைந்திருந்தது. இப்புதுமை முதல் தடவையாக 1988 யூன் 5ல் நாயுவில் உள்ள திருச்செபமாலை அன்னை ஆலயத்தில் கிறிஸ்துவின் உடல் பெரு விழாவில் இடம்பெற்றது. 12வது நற்கருணை புதுமை ஒக்டோபர் 31, 1995ல் வத்திக்கான் பாப்பாண்டவரின் பிரத்தியேக ஆலயத்தில் பலிப்பூசையின் போது, யூலியா பிரசன்னமாயிருக்க பாப்பாண்டவரின் முன்னிலையில் இடம் பெற்றது. அத்துடன் யூலியா பாப்பாண்டவருக்கு மரியாளின் செய்தியை கூறினாள். அதில் ஒப்புரவு அருட்சாதனத்தின் முக்கியத்துவம் பற்றியும், நற்கருணை மறைபொருளைப் பற்றியும் அனைவருக்கும் போதிக்கும்படி கேட்டுக் கொண்டார். 11வது நற்கருணை புதுமை 1994 நவம்பர் 24 கனடாவைச் சேர்ந்த ஆயர் டனிலக், அருட்தந்தை பீற்றர் வீனா இருவராலும் நாயுவில் அமைந்துள்ள மலைப்பிரதேசத்திலே திருப்பலி வேளையிலே சான்று பகரப்பட்டது. 1991 மே 16ல் நாயுவில் உள்ள செபமாலை அன்னை ஆலயத்தில் இடம்பெற்ற புதுமை பலரால் சான்றுபகரப்பட்டது. அவர்களுள் பிலிப்பைன்ஸ் நாட்டை சேர்ந்த 33 யாத்திரிகர்களும் அடங்குவர். 1996 செப்ரெம்பர் 17ல் யூலியாவின் நாக்கிலே இன்னுமொரு நற்கருணைப் புதுமை இடம்பெற்றது. இந்தப் புதுமை கிழக்கு மலேசியாவில் சிபு என்னும் இடத்தில் அமைந்துள்ள பேரால யத்தில் பல குருக்கள் ஒன்று சேர்ந்து ஆயர் டோமினிக் சு என்பவரால் திருப்பலி ஒப்புக் கொடுத்த வேளையில் இடம்பெற்றது.

> "திருச்சபையின் சிறப்பே நற்கருணையில்தான் தங்கியுள்ளது"
> – கபிரியேல் மோரரான் –

நாயுவில் இடம்பெற்ற சில புதுமைகள் மிகவும் அபூர்வமானவை. 1994 நவம்பர் 24ல் இருந்து 1997 ஆகஸ்ட் 27ற்கு உட்பட்ட காலப்பகுதியில் 7 தடவைகள் நற்கருணை மேலிருந்து கீழ்நோக்கி வந்த புதுமை இடம்பெற்றது. முதல் இரண்டு புதுமைகளும் கொரியாவில் பாப்பரசரின் மறைப்பணி பிரதிநிதியான பேராயர் ஜியோவானி புலாரிஸ் என்பவரால் சாட்சி பகரப்பட்டது. இந்தத் தடவை இரத்தம் வடிவது இடம்பெறவில்லை. பதிலாக பெரியவடிவிலான திருஅப்பம் வானதூதர் ஒருவரால் யூலியாவிற்கு வழங்கப்பட்டது. பின்பு அந்த வானதூதர் புனித மைக்கல் என்றும் அவர் திருப்பலி ஒன்றிலிருந்து அதை கொண்டு வந்தார் என்றும் கன்னிமரியாளின் செய்தியில் உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பின்பு சிறிய வடிவிலான திரு அப்பம் மேலிருந்து வந்து யூலியாவின் நாக்கில் தங்கியது. அந்த பெரிய வடிவிலான அப்ப்ம் சோலிற்கு(Seoul) அருகாமையில் உள்ள கவாசோன் என்ற இடத்திலே அருட்தந்தை ஸ்பீயிஸ் என்பவரின் ஆலயத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அருட்தந்தை அவர்கள் யூலியாவின் ஆன்மீக வழிகாட்டியாவார். 1995ன் இறுதி காலப்பகுதியில் மரியாள் கண்ணீர் விடத்தொடங்கிய 10வது ஆண்டை கொண்டாடுவதற்காக ஆயிரத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் நாயுவில் ஒன்று கூடி இருந்தார்கள். அங்கு 8 குருக்கள் திருப்பலி நிறைவேற்றினார்கள். திருப்பலியில் யூலியா நற்கருணை பெற்றுக்கொண்ட வேளையில் அவளின் நாக்கிலே அது மாற்றமடைந்து இரத்தம் வடிய ஆரம்பித்தது. இதை அங்கு குழுமியிருந்த அனைவரும் கண்டார்கள். அன்று திருவிழிப்பு வழிபாடு இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் அதிகாலை 3.45 மணிக்கு யூலியா ஒரு காட்சி கண்டாள். அந்த வழிபாட்டிலே யூலியா சிபுவை சேர்ந்த அருட்தந்தை பிரான்சீஸ் சு, குகாமை சேர்ந்த அருட்தந்தை பீற்றர் மார்சியல் மற்றும் பலர் முன்னிலையில் அந்த காட்சியைக் கண்டாள். அந்தக் காட்சியிலே மரியாளின் சொரூபத்துக்கு மேலேயிருந்த மரத்தினாலான சிலுவையில் இருந்த யேசுவின் உருவம் யேசுவின் உயிருள்ள உடலாக மாறி இரத்தம் வடிந்தது. இரத்தம் யேசுவின் இரண்டு கரங்கள், இரண்டு பாதங்கள், நெற்றி, விலா, இதயம் ஆகிய ஏழு (07) இடங்களிலிருந்தும் வடிந்தது. உடனடியாக ஏழு(07) காயங்களிலிருந்தும் வந்த இரத்தம் வெண்ணிற அப்பமாக மாறியது. அந்த வேளையில் ஆலயத்தின் திருச்சிலுவையிலிருந்து ஒரு ஒளிக்கதிரை

"நற்கருணை அருந்தியபின்
கண்களை மூடி இதயத்தை திற
இயேசுவைக் காண்பாய்"
-அவிலா தெரேசாள்-

பலரும் கண்டு கொண்டனர். அத்துடன் திரு அப்பங்கள் மேலிருந்து வந்து மரியாளின் சொரூபத்தின் முன்பாக திருப்பீடத்தில் தங்கின. ஆலயத்தில் குழுமியிருந்தவர்கள் பிரம்மையில் ஆழ்ந்தார்கள். திரு அப்பங்கள் யாராலும் தொடப்படாமல் பீடத்தின் மேல் விடப்பட்டது. பேராயரின் அறிவுறுத்தலின் பிரகாரம் இரண்டு குருக்களும் ஐந்து பொதுநிலையினரும் அப்பங்களை உண்பதற்கு தெரிவு செய்யப்பட்டார்கள். யூலை 02ம் திகதி அவர்கள் அவற்றை பெற்றுக்கொண்டார்கள். யூலியா அந்த அப்பத்தை பெற்றுக்கொண்டவேளை அது தசையாகவும் இரத்தமாகவும் மாறியது. இந்தச் சந்தர்ப்பத்தில் திருச்சிலுவை கிறிஸ்துவின் உயிருள்ள உடலாக மாறியபோது அவர் துன்பகரமாக பேசினார். அத்துடன் ஒரு நீண்ட செய்தியையும் கொடுத்தார். அந்த செய்தியின் முக்கியவிடயம்; "நற்கருணையிலே எனது உயிருள்ள, தனிப்பட்ட, உடல்ரீதியான பிரசன்னம் யாராலும் விவாதிக்கப்படமுடியாத உண்மை. முடிவில்லா அன்பின், தாழ்ச்சியின், வல்லமையின், ஞானத்தின் மறைபொருளாகவும் என்னுடைய உயிருள்ள பிரசன்னமாகவும் உள்ள நற்கருணையை விசுவசிப்பதற்காகவே நான் நற்கருணையை பார்க்கக் கூடிய உடலாகவும் இரத்தமாகவும் தொடர்ந்து மாற்றுகின்றேன்."

1997 யூன் 12ல் கொரியாவில் உள்ள சீயு மறைமாவட்ட ஆயர் பவுல் கிம், நாயுவை தரிசித்தார். அங்கே அவர் "நற்கருணை புதுமை இன்னுமொரு தடவை இடம் பெற்றால் அந்த திரு அப்பங்கள் பாதுகாக்கப்படவேண்டும்" என்று கூறிய போது திருச்சிலுவையிலிருந்து ஒரு பிரகாசமான ஒளி தோன்றியது. அத்துடன் ஒரு திருஅப்பம் மேலிருந்து வந்து மரியாளின் சொரூபத்தின் முன்பாக பலிப்பீடத்தில் ஒரு பெரிய சத்தத்துடன் விழுந்தது. அந்த நற்கருணை ஒரு கதிர்ப் பாத்திரத்தினுள் இடப்பட்டு அந்த பங்கின் ஆலயத்திலே வைக்கப்பட்டது. பின்பு அது தலைமை மறைமாவட்ட அலுவலகத்திற்கு இடமாற்றப்பட்டது. 1997 ஆகஸ்ட் 27ல் யாத்திரிகர் அந்த ஆலயத்திலே திருச்செபமாலை சொல்லிக்கொண்டிருந்த வேளை அருட்தந்தை ஸ்பீஸ், யூலியா ஆகியவர் களுக்கு முன்பாக நற்கருணை வந்து தங்கியது. நற்கருணை தங்கிய அந்த இடத்திலிருந்து நறுமணம் கமழும் வாசனை வீசிக் கொண்டிருக்கின்றது.

1996 ஒக்டோபர் 19ல் யூலியா, யேசு சிலுவையில் தொங்கி இரத்தம் வடித்துக்கொண்டிருக்கும் காட்சியை மீண்டும் கண்டாள். அவரின் உடல் விலைமதிப்பில்லா இரத்தத்தினால் மூடப்பட்டிருந்தது. இந்த இரத்தம் அந்த ஏழு காயங்களிலிருந்து வந்தது மட்டுமல்ல அவரை சாட்டையால் அடித்தபோது ஏற்பட்ட காயங்களிலிருந்தும் வந்தது. அந்த வேளையில் அவள் துன்பகரமான, அன்புள்ள யேசுவின் குரலை கேட்டாள்.

அவர் "வானிலிருந்து இறங்கிவந்த அப்பம் நானே. நான் அடையாளங் களூடாக வலியுறுத்துவது என்னவென்றால், நீங்கள் உங்கள் இதயங் களைத் திறந்து என்னை ஏற்றுக்கொண்டால் என்னுடைய வாழ்வும், அன்பும் உங்கள் அனைவரையும் மிகுதியாக நிரப்பும். ஆனால் என்னுடைய இதயம் குழப்பமடைந்துள்ளதுடன் இரத்தமும் சிந்துகின்றது. காரணம் என்னுடைய சில பிள்ளைகள் மட்டும் தான் உண்மையாக என்னை ஏற்றுக் கொள்கின்றார்கள். உலகின் பல இடங்களிலுமுள்ள என்னுடைய பிள்ளைகள் எனது உயிருள்ள பிரசன்னத்தை ஏற்றுக்கொள்ளவும் அதை பரப்புவதற்காகவும் இன்று மீண்டும் ஒருமுறை ஒரு அடையாளத்தை காட்டியுள்ளேன். ஆகவே இந்த அவசரமான நேரத்திலே மிகவும் விரைவாக நற்கருணையின் முக்கியத்துவம் அனைவருக்கும் தெரிவிக்கப்பட வேண்டும். என்னுடைய தன்மையிலிருந்து விடுபட்டு உங்களுடன் ஒன்றிக்க வேண்டும் என என்னுடைய அன்பு என்னை தூண்டுகின்றது" என்று கூறினார்.

1996 ஒக்டோபர் 31ல் மரியாள் யூலியாவிற்கு கூறியது; "அனைவருக்கும் நற்கருணையின் முக்கியத்துவத்தை அழுத்தமாக கூறு. நற்கருணையின் மூலமாக கடவுள் உன்னில் இருப்பார்". 1993 யூலை 27ல் மரியாள் கூறியது; "என்னுடைய பிள்ளைகள் அனைவரும் நற்கருணையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளுமுகமாக பல வழிகளூடாக நற்கருணையின் உருவங்களை வெளிப்படுத்தியுள்ளேன். உடனடியாக நற்கருணையில் பிரசன்னமாயிருக்கும் கடவுளை நோக்கி பற்றி எரியும் அன்பாகவும், பரிகாரமாகவும், ஆராதனையாகவும் மாறுங்கள்".

எனவே இந்த வகையான செய்திகளிலிருந்து நற்கருணை புதுமைகளின் அடிப்படை நோக்கம் புலனாகின்றது. புனிதமான அன்பை, தனது திருமகனின் தியாகத்தை நாம் விளங்கிக்கொள்வதையும், திருச்சபையூடாக நிகழும் இறைபிரசன்னத்துக்கும் அவருடைய செயற்பாடுகளுக்கும் நாம் விழிப்பாயிருப்பதையும் பார்க்கவே மரியன்னை மிகவும் ஆவலாயுள்ளாள். இதன் காரணமாகவே மரியாள் யூலியா கிம் ஊடாக பல நற்கருணை புதுமைகளை மீண்டும் மீண்டும் கொண்டு வருகின்றாள். எமது செயற்பாட்டிற்கான அவளது குரலுக்கு, அழுத்தமான அவசரமான அழைப்புக்கு கவனமாக செவிகொடுத்து உற்சாகத்துடனும் பற்றி எரியும் ஆர்வத்துடனும் பிள்ளைகளுக்குரிய பாசத்துடனும் பதில் கொடுப்போம்.

**அருள்திரு லூயிஸ் பொன்னையா அ.ம.தி.**
**தமிழாக்கம் சகோ. அன்ரன் ஸ்ரீபன்**

# நற்கருணை பற்றிய திருச்சபையின் மடல்கள்

**முகவுரை:**

திருச்சபையில் தேவநற்கருணை ஓர் அருள் ஊற்றும் திருவருட் சாதனமாகும். திருச்சபையின் வாழ்வில், மையமாகவும், அச்சாரமாகவும் நற்கருணை மிளிர்கிறது. இதன் முக்கியத்துவத்தைத் திருச்சபை, மடல்கள் மூலமாகவும் மற்றும் பல்வேறு வழிகளாலும் விசுவாசிகளுக்கு வலியுறுத்தி வருகிறது.

**'விசுவாசத்தின் மறைபொருள' (MYSTERIUM FIDEI)**

இம்மடல் 1965ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3ம் நாள், றோமாபுரி தூய பேதுரு பேராலயத்தில் திருத்தந்தை 6ம் சின்னப்பரால் வெளியிடப்பட்டது. இது முழுமையாக தேவநற்கருணை ஆராதனையையும், அது பற்றிய திருச்சபையின் கொள்கையையும் வலியுறுத்துகிறது.

> 'தனித்துவமான நிறைவான விதமாக புதுமைகளை ஒருங்கே கொண்டு எல்லா தெய்வீக உண்மையையும் ஒருங்கே கொண்ட ஒரே மறைபொருள்'
> -திருத்தந்தை பதின்மூன்றாம் பத்திநாதர்-

கத்தோலிக்க திருச்சபைக்கு அதன் மணவாளனாகிய கிறிஸ்து தம் அளவுகடந்த அன்பினால் அளித்த அளப்பரிய அருங்கொடையே "விசுவாசத்தின் மறைபொருளான" தேவநற்கருணை ஆகும்.

திருச்சபையின் வாழ்வில் முக்கிய இடத்தைப் பெறும் இறை வழிபாட்டின் இதயமும் மறைபொருளுமாகிய தேவநற்கருணை, கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும், அதைச்சுத்திகரித்து வலுவூட்டும் சாதனமுமாக விளங்கி அன்பினால் எம்மையும் இறைவனையும் நெருக்கமாகப் பிணைத்து நிற்கிறது. தேவநற்கருணை மிகச்சிறந்த விசுவாசத்தின் மறைபொருளாகும்.

தேவநற்கருணையாகிய மறைபொருளின் மூலமாக ஒருமுறை மட்டும் கல்வாரியில் நிறைவுபெற்ற சிலுவைப்பலி சிறப்பாக அடையாளப்

படுத்தப்பட்டு தொடர்ச்சியாகத் திருச்சபையில் நினைவு கூரப்படுகிறது. இதன் மூலம் எமது நாளாந்த பாவச் செயல்கள் மன்னிக்கப்படுகின்றன.

மோயீசன் காளையின் இரத்தத்தால் பழைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தியது போல புதிய உடன்படிக்கையின் இணைப்பாளரான கிறிஸ்து ஆண்டவர், தேவநற்கருணையை உண்டாக்கிய போது தம் இரத்தத்தினால் அதை உறுதிப்படுத்தினார்.

'நற்கருணையே வாழ்வின் மையம்'
திருத்தந்தை பத்தாம் பத்திநாதர்

நற்செய்தியாளர் குறிப்பிடுவது போல கிறீஸ்து அப்பத்தையும், திருக்கிண்ணத்தையும் எடுத்து நன்றி கூறி தம் சீடரிடம் கொடுத்து இதைத் தம் நினைவாகச் செய்யுமாறு பணித்ததிலிருந்து இதன் தொடர்ச்சியான புதுப்பிக்கப்படும் தன்மை தெளிவாகின்றது. ஆதித்திருச்சபை இதற்குப் பிரமாணிக்கமாக இதைக் கடைப்பிடித்து திருத்தூதரின் படிப்பினைக்குத்தம்மை அர்ப்பணித்து நற்கருணைப் பலியில் ஒரேயுள்ளமாய்க் கூடியிருந்ததை திருத்தூதர் பணி எமக்குத் தெளிவுபடுத்துகிறது.

நம் மீட்பர் தம் திருச்சபைக்கு விட்டுச்சென்ற தேவ நற்கருணை அன்பினால் அனைத்துக் கிறிஸ்தவர்களையும் ஒன்றிணைக்கும் அடையாளச் சின்னமாக விளங்குகிறது. இதன் மூலம் திருச்சபையாகிய மறை உடலின் தலையாக கிறீஸ்துவே விளங்குகிறார்.

திருப்பலிக்கொண்டாட்டத்தின் அர்ச்சிப்பு வேளையில் கோதுமை அப்பம் கிறீஸ்துவின் உடலாகவும், திராட்சை இரசம் கிறீஸ்துவின் இரத்தமாகவும் முழுமையாக உருமாறுவதன் பதார்த்தமாற்றம் (Transubstantiation) மூலமாகக் கிறீஸ்து தேவநற்கருணையில் பிரசன்னமாயிருக்கிறார்.

தேவநற்கருணையின் மகிமையை உணராத கிறீஸ்தவர்கள் இல்லை. தேவநற்கருணை மூலம் (இம்மானுவேல்) 'நம்மோடு கடவுள்' வாழ்கிறார்.

## 'கிறீஸ்துவின் மறையுடல்' (MYSTICI CORPORIS CHRISTI)

1943ம் ஆண்டு ஜூன் மாதம் 29ம் நாள் திருத்தந்தை 12ம் பத்திநாதர் அவர்களால் இம்மடல் ரோமாபுரி தூய பேதுரு பேராலயத்தில் வெளியிடப்பட்டது. இம்மடல் திருச்சபையை விஷேடமாகக் குறிப்பிட்டுள்ள போதிலும் நற்கருணை பற்றியும் கூறுகின்றது.

மறையுடலாகிய திருச்சபையை கிறீஸ்துவின் உடல் எனக் கூறுவது பொருத்தமானதே ஏனெனில் தூய பவுல் 'திருச்சபையாகிய உடலுக்குத்

தலையும் தொடக்கமும் அவரே' (கொலோ 1:18) எனக் குறிப்பிடுகிறார்.

இவ்வுடல் முதலில் கிறீஸ்து அனுப்பிய தூய ஆவியானவரின் வல்லமையால் உறுதிப்படுத்தப்பட்டு பெந்தக்கோஸ்தே திருநாளன்று வெளிப்படையான தோற்றத்தைப் பெற்றது.

> அருட்சாதனத்தில் ஓர் அடையாளமாக கிறிஸ்து இருப்பதில் எச் சிரமமுமில்லை ஆனால் அவர் விண்ணுலகில் இருப்பது போன்றே அருட்சாதனத்திலும் இருக்க வேண்டும் என் பதே மிகச் சிக்கலான தாக விளங்குகிறது. இதை விளங்கிக் கொள் வோர் மிகப்பேறுபலனு டையோராவார்"
>
> -புனித பொனபெஞ்சர்-

கிறீஸ்துவைத் தலையாய்க் கொண்ட திருச்சபையின் சிறப்பையும், ஒன்றிப்பையும், பிணைப்பையும், தேவநற்கருணைப்பலி மூலம் விசுவாசிகள் அனைவரின் கண்முன்னும் சிறப்பான விதமாக வெளிப்படுத்த நம் ஆண்டவர் கிறீஸ்து திருவுளம் கொண்டார்.

நற்கருணைப்பலியிலே திருப்பணியா ளராகிய குருக்கள் கிறிஸ்துவை மட்டுமன்றி, மறையுடலையும், விசுவாசிகள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இவ்வாறு விசுவாசிகள் அனைவரையும் இணைத்த பொதுச் செபத்தினால் குரு தம் கைகளால் மாசற்ற செம்மறியை பலிப்பீடத்தில், விசுவாசி கள் அனைவரோடும் இணைந்து நித்திய தந்தையாம் இறைவனுக்கு ஏற்ற புகழ்ச்சியின் பலியாக ஒப்புக்கொடுக்கிறார். இது எவ்வா றெனில் அன்று மறையுடலின் தலையாகிய கிறீஸ்து தம்மை சிலுவை மரத்தில் முழுத் திருச்சபைக்கும், முழு மனித குலத்திற்கும் பொதுவாகத் தூய பலியாக்கினார்.

மேலும் தேவநற்கருணைத் திருவருட்சாதனம் உயிருட்டமுள்ள சிறப்புமிக்க திருச்சபையின் ஒன்றிப்பை வெளிக்காட்டும் சித்திரமாய் துலங்குகிறது.

இத்துன்பகரமான காலத்தில் பல ஆன்மாக்கள் தேவநற் கருணையின் போர்வையால் நம் ஆண்டவர் கிறீஸ்துவுக்குள் மறைக்கப்பட்டு நெருக்கமாய்ப் பிணைக்கப்பட்டால் அவரது அன்பிலிருந்து அவர்களைப் பிரிக்கக்கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எது தான் அவர்களைப் பிரிக்கமுடியும்?

*(இம்மடல் வெளிவந்த காலத்தில் துன்பகரமான இரண்டாம் உலகமகா யுத்தத்தின் இருளடைந்த கார் மேகங்கள் உலகை உலுப்பிக் கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.)*

## திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் அனைத்து ஆயர்களுக்கும் எழுதிய தேவநற்கருணை ஆராதனையும் மறைபொருளும் பற்றிய மடல்.

இம்மடல் வத்திக்கான் நகரில் 24ம் நாள் பெப்பிரவரி மாதம் 1980ம் ஆண்டு பெரிய வியாழக்கிழமையை முன்னிட்டு வெளியிடப்பட்டது. இம்மடல் இதற்கு முன்னைய ஆண்டு இதே நிகழ்வை முன்னிட்டுக் குருக்களுக்கான மடலோடு மிக நெருங்கிய தொடர்புள்ளதென திருத்தந்தை முகவுரையிற் குறிப்பிடுகிறார். ஆனால் இம்மடல் சகோதர ஆயர்களுக்கும் அத்தோடு குருக்களுக்கும் திருத்தொண்டர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

தேவநற்கருணை குருத்துவத்தின் ஊற்றும் மையமுமாகும் ஏனெனில் தேவநற்கருணையின் உருவாக்கத்துடனேயே குருத்துவமும் தோற்றம் பெற்றது.

"இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்ற நம் ஆண்டவரின் திருவாக்குடனேயே தேவநற்கருணை தொடர்ச்சியாகக் கொண்டாடப் படுகிறது. இது ஆயர்களுக்கும் குருக்களுக்கும் பணிக்கப்பட்ட சிறப்பான 'விசுவாசத்தின் மறை பொருளாகும்' அதேவேளை கிறீஸ்துவில் விசுவாசம் கொண்ட எல்லா இறைமக்களுக்கும் இது அளிக்கப்படுகிறது.

தேவநற்கருணை ஆராதனை தூயஆவியில் கிறீஸ்து மூலம் தந்தை யாகிய இறைவனுக்கு அளிக்கப்படுகிறது. ஏனெனில் தூய யோவான் நற்செய்தியாளர் "தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார்." எனத் தந்தையாகிய இறைவனின் அன்பைத் தெளிவுபடுத்துகிறார். இவ்வாறு தேவநற்கருணை ஆராதனை அன்பின் வெளிப்பாடு, இது உள்ளார்ந்த கிறீஸ்தவ அழைப் பிற்குச் சான்று பகர்கிறது. ஆகவே தேவநற்கருணை அன்பின் ஊற்றும், கிறீஸ்தவ சீடத்துவ வாழ்வின் மையமும் அச்சாரமுமாகும். இதுவே ஒன்றிப்பின் சின்னமும் அன்பின் பிணைப்புமாகத் துலங்குகிறது. இது கிறீஸ்து எமக்கென விட்டுச்சென்ற ஆன்மீக ஒன்றிப்பின் ஊற்றான திரு வருட்சாதனமாகும்.



சகோ. யே. அ. அருள்தாசன்

# "நற்கருணையின் திருச்சபை" (Ecclesia De Eucharistia)

பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் யோவான் பவுல் எழுதிய 14வது திருமடல் திருச்சபை நற்கருணையோடு கொண்டுள்ள உறவை ஆழமான முறையில் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. ஒப்பீட்டளவில் சிறிய மடலாக இருந்தாலும் சிறப்பான இறையியல், ஒழுக்கவியல், மேய்ப்புப்பணியியல் காரணிகளை உள்ளடக்கியுள்ளது. 2003 பெரிய வியாழன் அன்று ஆண்டவரின் பாஸ்காத்திரிதின ஆராதனையின் ஆரம்ப வேளையில் ஒப்பமிடப்பட்டு அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது.

கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும், கொடுமுடியுமாக விளங்கும் திருப்பலியானது திருச்சபையின் ஆன்மீகக்களஞ்சியத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. இத்திவ்விய பலியில் கிறிஸ்து ஆண்டவர் தன்னையே உலகின் மீட்பிற்காக தந்தையிடம் ஒப்புக்கொடுக்கிறார். திருப்பலியில் விசுவாசத்தின் மறைபொருளைக் கொண்டாடுவதன் மூலம், திருச்சபை யானது பாஸ்கா நிகழ்வுகளை அனைத்துக்கால மக்களுக்கும் அக்காலத் திற்கு ஏற்றதாக்குகிறது.

முதலாவது அத்தியாயமானது, விசுவாசத்தின் மறைபொருளானது குருவினுடைய திருப்பணியால் உலகின் மீட்பிற்காக சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தமாகவும், வழங்கப்பட்ட அப்பமாகவும் உருமாறும் நற்கருணையினது தியாகத்தின் தன்மையை வெளிப்படுத்துகிறது. நற்கருணைப் பலியானது மீண்டும் மீண்டும் செய்யப்படுகின்ற அல்லது காலவரையறைக்குள் பலுகச் செய்கின்ற ஓர் பாஸ்கா நிகழ்வு அல்ல மாறாக சிலுவையில் நிறைவேற்றப்பட்ட அந்த ஒரே பலி உலகமுடிவுவரை நினைவு கூரப்படுகிறது. "நற்கருணையானது சாவின் கனாகனத்தைக் குறைக்கும் மறுவாழ்வின் மருந்து" என புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார் குறிப்பிடுகிறார். எதிர்கால வாழ்வின் நம்பிக்கையான, நற்கருணையானது இன்றைய உலகில் நலிவுற்று, அதிகாரங்கள் எதுவும் இல்லாது, ஏழைகளாக, மற்றவனின் உதவிக்காக ஏங்கி வாழ் பவர்களுக்கு, கைகொடுத்து வாழ்வில் நம்பிக்கையை வழங்க வேண்டிய பொறுப்பு விசுவாசிகள் அனைவருடைய பணியாகும் என்பதை நினை வூட்டுகிறது.

கிறிஸ்துவுக்காக அரைக்கப்டுவேன் அப்பமாவேன்
-அந்தியோக்கு இஞ்ஞாசியார்-

'நற்கருணையானது திருச்சபையை கட்டி எழுப்புகிறது' என்பது இரண்டாம் அத்தியாயத்தின் தலைப்பு ஆகும். நற்கருணைப் பந்தியில் பங்குபெறும் விசுவாசிகள் வெறுமனே கிறிஸ்துவை பெறுவதோடு மாத்திரம் நின்றுவிடாது, கிறிஸ்துவாலே அவர்கள் பெறப்படுகிறார்கள். திருச்சபையின் ஒருமைப்பாட்டை இயக்கும் சக்திகளாக திரு இரசமும், திரு அப்பமும் விளங்குகிறது. திருச்சபையானது அப்ப, இரசக் குணங்களில் திருச் சபைக்குள் வாழ்ந்து, திருச்சபையைக் கட்டியெழுப்பும் ஆண்டவரோடு இணைந்துள்ளது. திருச்சபையானது திருப்பலி வேளையில் மாத்திரமல்லாது, எப்பொழுதும் கிறிஸ்துவை வழிபட்டு விலைமதிப்பிடற்கரிய பொக்கிஷமாக நற்கருணையை வைத்திருக்கிறது.

'நற்கருணையின் அப்போஸ்தலிக்கமும் திருச்சபையும், என்பதே மூன்றாம் அத்தியாயத்தின் தலைப்பு ஆகும். திருச்சபையின் முழுமையான இருப்பிற்கு அப்போஸ்தலிக்க பாரம்பரியம் இருக்கவேண்டும் அவ்வாறே ஆயர் இல்லாது நற்கருணை இருக்கமுடியாது. கிறிஸ்துவின் பிரதிநிதியாக குரு திருப்பலியை நிறைவேற்றுகிறார். குருவானவர் தனது பிரத்தியேகமான சொத்தாக நற்கருணையைக் கருதுவதில்லை. மீட்பை நோக்கிப் பயணிக்கும் திருக்குலத்தின் நன்மைக்காக குருவானவர் பணியாற்றுகின்றார். கிறிஸ்தவ குழுமமானது நற்கருணையை ஓர் சொத்தாகக் கருதுவதில்லை. மாறாக ஓர் கொடையாக ஏற்றுக்கொள்கிறது.

'நற்கருணையும் திருச்சபையின் ஒருமைப்பாடும்' என்ற கருப்பொருள் நான்காம் அத்தியாயத்தின் மையமாக அமைந்துள்ளது. உலகின் மீட்பிற்காக கிறீஸ்துவின் உடலினதும் இரத்தத்தினதும் பணியாளராகிய திருச்சபையானது கிறிஸ்துவினாலே உருவாக்கப்பட்டதாக இருக்கிறது. கண்ணால் கண்டு கொள்ள முடியாத தனது ஒருமைப்பாட்டை, அப்போஸ் தலர்களின், படிப்பினைகளுக்கு நம்பிக்கையாக இருப்பதன் மூலமும், திருவருட்சாதனங்களில் இணைந்திருப்பதன் மூலமாகவும் கண்ணால் காணக்கூடிய விதத்தில் திருச்சபையானது வெளிப்படுத்துகிறது. ஒன்றிப்பை ஏற்படுத்தும் கருவியாக நற்கருணையானது பாவிக்கப்படமுடியாது மாறாக முன்னரே இருக்கின்ற ஒருமைப்பாட்டை எடுத்துக்கூறி உறுதிப்படுத்துகிறது. இந்நிலையில் சபைகளுடன் உரையாடல் வலியுறுத்தப்படுகிறது. உண்மையான மனநிலையில் நற்கருணை கொண்டாடப்படும் போது நற்கருணையானது ஒருமைப்பாட்டை உருவாக்குகின்றது. கட்டியெழுப்புகின்றது. நற்கருணையானது தனிநபர் ஒருவருக்கோ அல்லது குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்கோ வரையறுக்கப்பட்டதொன்று அல்ல.

'நற்கருணைக் கொண்டாட்டத்தின் மாண்பு' என்பதே ஐந்தாவது அத்தியாயத்தின் தலைப்பாக இருக்கிறது. ஒப்பிடப்பட முடியாத நற் கருணை என்னும் கொடையைச் சுற்றி மக்களை ஒன்றுசேர்க்கின்ற

மகிழ்ச்சியினை ஆழப்படுத்தும் வெளியார்ந்த அடையாளங்களால் திருப்பலிக் கொண்டாட்டம் குறித்துக்காட்டப்படுகிறது. கடந்த காலம் முழுவதும் சிற்பம், ஓவியம், இசை, இலக்கியம் ஆகிய துறைகள் மூலம் தனது மணவாளனுக்கு திருச்சபையானது சாட்சியாக இருந்து வந்துள்ளது.

'நற்கருணையின் பெண்மணி' என்பது ஆறாம் அத்தியாயத்தின் தலைப்பாக இருக்கிறது. கிறிஸ்துவை தனது உதரத்தில் தாங்கியதன் மூலம் முதலாவது நற்கருணைப் பேழையாக அன்னைமரியாள் விளங்குகிறாள். விசுவாசிகளுக்கு நற்கருணையானது வழங்கப்படுவதன் மூலம் அவாகள் அதிபரிசுத்த பரமதிரித்துவத்திற்கு இடைவிடாது புகழ்பாட அழைக்கப்படுகிறார்கள்.


இறுதியாக பரிசுத்ததனத்தின் பாதையில் நடக்க விரும்புவர்களுக்கு புதிதாக எதுவித நிகழ்ச்சியும் கொடுக்கப்படாது. அந்த நிகழ்ச்சியானது முதலே கொடுக்கப்பட்டாயிற்று. இந்நிகழ்ச்சி கிறிஸ்துவாக இருக்கிறார்.

படவும், வேண்டியவராக இருக்கிறார். நற்கருணையின் மூலமாகவே இந்நிகழ்ச்சி அமுலாக்கப்படுகிறது.

## நிறைவாக

திருச்சபையில் தேவநற்கருணையின் சிறப்பும், நிறைவும் முழுமையும் விபரிக்க முடியாதது. திருச்சபை வரலாற்றில் கிறீஸ்து நற்கருணையை ஏற்படுத்திய காலம் முதல் தொடர்ச்சியாக இடையறாது இன்றைக்கு 2000 ஆண்டுகளாக நிலைபெறும் நற்கருணைப்பலி திருச்சபையின் இருப்புக்கும், இறைமக்களின் விசுவாசத்திற்கும் உரமும், ஊட்டமும், ஊற்றுமாகத் திகழ்கின்றது. ஆகவே தேவநற்கருணை திருச்சபையின் வாழ்வில் ஒருபோதும் பிரிக்கப்பட முடியாத உயிருள்ள அம்சமாகும். இதன் முக்கியத்துவத்தை காலம் காலமாகத் திருச்சபை வலியுறுத்தி வருகிறது.

சகோ. ப. தே. யூட்தாஸ்



> ' நீ பசியாயிருந்தாய்
> – கடவுள் உணவானார் –
> தாகமாயிருந்தாய் – பானமானார் '
> –புனித அகுஸ்தினார்–

# இவ்விதழின் இறையியலாளர்
- 12 -

## புனித அத்தனாசியார் (297-373)

இவர் எகிப்திலுள்ள அலெக்சாந்திரியாவை பிறப்பிடமாகக் கொண்டவரும், இறையியலை நன்கு கற்றுத் தேர்ந்தவரும் ஆவார். இவர் 318ல் தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்டு அலெக்சாந்திரிய நகர் ஆயரின் செயலராக நியமிக்கப்பட்டார். இவர் நிசேயா திருச் சங்கத்திற்கு அவ் ஆயருடன் சென்று ஆரிய பேதகத்திற்கு எதிராக செயலாற்றினார். இவர் ஆயரான பின்பு நிசேயா சங்க விசுவாசக் கோட்பாட்டை தனது மறைமாவட்டத்தில் உறுதிப்படுத்தினார். இவர் "மெலேற்சியஸ்" இன் (Meletius) சீடர்களுக்கு எதிராகவும் (4ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மெலேற்சியசும் (Meletius) அவரது ஆதரவாளர்களும் ( Meletians), கலாபனைக் காலத்தில் மறுதலித்தவர்கள் திரும்பவும் திருச்சபையில் சேரவிரும்பும்போது மிகவும் கடுமையான போக்கை கடைப்பிடித்தவர்கள்), ஆரிய பேதக ஆதரவாளர்களுக்கு எதிராகவும் தனது விவாதங்களை முன்வைத்தார். ஆரிய பேதக ஆதரவாளர்களின் தூண்டுதலால் பேரரசன் இவரை நாடு கடத்தினான். நான்கு தடவைகள் இவர் நாடு கடத்தப்பட்டு 20 வருடங்கள் வேற்று இடங்களில் கழித்தார். இவர் தியாக்கோனாக இருந்தபோதே பேதக கொள்கைகளை உடையவர்களுக்கு எதிராக வார்த்தை மனுவுருவானது பற்றி எழுதினார். இவர் தனது நாடு கடத்தப்பட்ட வாழ்க்கையில், மடத்துறவு வாழ்க்கையில் அதிக ஈடுபாடு காட்டினார். வேதசாட்சி அல்லாத பகிரங்க வணக்கம் பெற்ற ஆயர்களில் இவரே முதன்மையானவர். இவர் கத்தோலிக்க கோட்பாடுகளுக்கு ஆதரவாக முழுமூச்சோடு நின்றதோடு இயேசுவின்பால் மிகுந்த ஈடுபாடு கொண்டு விளங்கினார்.

### இவரது படைப்புக்கள்

A) இறையியல் சர்ச்சைகள் சம்பந்தமான நூற்தொகுப்புக்கள்

1) ஆரிய பேதகத்துக்கு எதிரான கோட்பாட்டு நூற்தொகுப்பு. இதில் ஆரிய பேதகத்தை கண்டித்தும் மறுசீரமைப்பு செய்யவும் வற்புறுத்தினார்.

11) பேரரசன் கொன்ஸ்ரான்சியுசுக்கு எழுதியது.

111) தான் கலாபனையிலிருந்து தப்பி ஓடியது சரியே என்பதற்கான வாதங்கள்

**B)** கோட்பாட்டுத் தொகுப்புக்கள்

1) கிரேக்க மக்களுக்கு எதிரான பேதகம் பற்றிய விளக்கம்

11) வார்த்தை மனுவுருவானது பற்றிய தொகுப்பு.

111) ஆரிய பேதகத்தோருக்கு எதிரான தொகுப்பு

**C)** ஆன்மீக நூல்கள்

1) திருப்பாடுகளுக்கு ஆன்மீக ஒழுக்கவியல் விளக்கம்

11) புனித வனத்து அந்தோனியாரின் வாழ்க்கை வரலாறு.

111) கன்னிமை பற்றிய தேடல்

## கோட்பாடு

இவர் விவிலியத்திலும் பாரம்பரியத்திலும் பெற்றுக்கொண்ட விடயங்களை நன்கு வெளிப்படுத்திய சிறந்த கோட்பாட்டியலாளராவார். இவரது திரித்துவம் மற்றும் மீட்புப் பற்றிய படைப்புக்கள் காத்திரமானவை.

1) திரித்துவம்:-

மகன் தந்தையிடம் இருந்து வருகின்றார். அவர் கடவுளின் சாயலைப் பெற்றிருக்கின்றார். அவரை ஒளியிலிருந்து பிரிக்கமுடியாது. தந்தையில் மகனும், தூய ஆவியும் இருக்கின்றார்கள். இதுவே 'சுபா வங்களின் ஒன்றிணைப்பு பற்றிய மறையுண்மை என்று சொல்லுகின்றார்.

2) மீட்பு:-

புனித அத்தனாசியார் மீட்புப்பற்றிய மறையுண்மைகளைச் சொல்லுகின்றார். கிறீஸ்து கடவுள் இல்லையென்றால் எப்படியொரு மனிதன் மீட்புப் பெற முடியும் என்று கேள்விக்கணை தொடுக்கின்றார். அவதாரத்தைப்பற்றி சொல்லுகையில் கிறிஸ்து உண்மையில் மனித அவதாரம் எடுத்தார் என்று சொல்லுகின்றார். மோட்சம் செல்லுவதினூடாக நாம் மகனுக்குரிய தெய்வீக சாயலை பெறுவோம் என்கின்றார். நாங்கள் இறைத்தன்மை அடைவதற்கு கடவுள் எங்களுக்காக மனிதனானார் என்றும் சொல்லுகின்றார்.

**சகோ. ப. விமல் அ.ம.தி.**

# Synopsis

## THE LAST SUPPER - SACRIFICE AT CALVARY AND THE EUCHARISTIC SACRIFICE

For these three kinds of sacrifice there is no difference strictly speaking. There is very much an interconnection among these three dimensions of sacrifice. This is after all a kind of a celebration which gathers people in the name of God the ever living and the Eucharistic living Lord Jesus Christ

In Egypt the Israelites were really treated as or worse than animals, but God the Yahweh released them all from the king of Egypt. There they celebrated the Passover celebration (Ex.12:1-28)

In the New Testament, Jesus was the sacrifice and the sacrificer. Through this event of unconditioned love Jesus our Lord saved the people of God from the sins that we all commit and the great sin of Adam and Eve.

To celebrate these sacrifices we every day offer the Holy Eucharist. It shows or rather makes us to relive the death of Jesus Christ at Calvary which was the real beginning of our liberation. There is no end for these three aspects. It is a celebration through out the earth's existence by the people of God for the greatest gift they received from God. It shows that God is eternal and the ever living and the son of God, Jesus also is living among us and in us in the form of the Holy Eucharist. This Holy Eucharist present among us always reminds us of God's great love for us.

*Bro. Selvaratnam.*

# OUR LIFE AND THE EUCHARISTIC SACRIFICE

From the dawn of creation man has been offering sacrifices and performing liturgical celebrations to the Supreme Being. Sacrifice is a common feature in many religions. The Paschal sacrifice of the Israelites of the Old Testament ( the celebration of the unleavened bread) prefigured the Eucharistic celebration of the New Testament in the Catholic Church.

Jesus Christ instituted the Sacrament of the Eucharist on Holy Thursday: we can find this in Luke, 22:19,20. The great significance of the Eucharistic sacrifice is that Jesus Christ is both the priest and the victim. This mystery should not merely end in ceremonies. It should be our life, the very core of our Christian life. In short it is the source of our life. It is not just a participation, but more than that to be witnesses of Jesus Christ by our life. Our ideal ought to be to offer ourselves with Jesus Christ in every Mass and live the Christian values.

***Mr. M.G. Xavier.***

# EUCHARISTIC MINISTERS

In the history of salvation we see that God has chosen some people and fulfilling His Mission through them. In this line in the history of the Church we see that, servants dedicating themselves to the service of God. When Jesus was living in this world He went every where preaching the Good news, healing the sick and teaching about the kingdom. So to continue His Mission Jesus gave authority to His disciples and sent them to His Mission. With the mission of disciples lots of people believed in Jesus and dedicated themselves to be the disciples of Jesus.

From the beginning of the Church we could see many sacrificial activities done by various people. Specially the liturgical ceremonies were conducted by the Bishops, priests, deacons, lectors etc.

Now in many mission countries there is a scarcity of servants to lookafter the spiritual necessities of the people who are newly baptized. So on this occasion, the Church has opened the door to the lay people to take charge of some duties. In some countries the laity has been working as Eucharistic Ministers, due to the lack of priests. The lay people have the responsibilities to work for the community and to be trained to work in the Church permanently or voluntarily.

In the Jaffna diocese, the educational programme has been conducted for the Eucharistic ministers. Therefore volunters should come forward to participate in the active programme. To serve as Eucharistic minister is not only the sharing in the body of Christ during the mass but also visiting the sick and needy, looking after the elderly people, preparing students for Holy communion and to be the active participant of the Church activities, etc.

*Mr. Pancras.*

## RECENT EUCHARISTIC MIRACLES

The biggest news two thousand years ago should have been the Incarnation of God the Son in our human world. The most important reality in our current world also is the continuing Presence and Redemptive work of Christ through his Church for the whole human race.

The human rejection of the Divine Plan of Salvation is still continuing today. As the world wide slide of humans into loss of faith and moral decay continues, God has been sending the Blessed Mother to our world to urge us to reform our lives and to help us overcome our evils and dangers. Our Lady is most anxious to see us understand the Love and Sacrifices by her Divine Son and open our eyes to the awesome reality of His Real Presence and Activities through His Church. That is why she has been bringing to us Eucharistic miracles repeatedly through Julia Kim, a humble mother of four children in Naju, South Korea.

Most of the Eucharistic miracles through Julia involved the changing into Flesh and bleeding of the Sacred Host on her tongue. It occurred for the first time on the feast of Corpus Christi on June 5, 1988 and continues at intervals to this day. Also Sacred Hosts were coming down from the crucifix in the chapel and this too has happened several times. The first two miracles occurred in the presence of the Papal Pro Nuncio in Korea.

The main message accompanying these miracles call for regular Confessions and to shun sacrilegious Communions. Our Blessed Mother is being used by God in a greater way now than ever to rekindle our weakened faith. Within the past century the frequency of her signs reflects the urgency for the sinful mankind to heed her call for repentance and conversion.

*Rev. Fr. Louis Ponniah O.M.I.*

## THE ENCYCLICAL LETTERS ON THE HOLY EUCHARIST

The mystery of faith, the Eucharist is the gift beyond description which the Catholic Church has received as a pledge of boundless love from Christ. The Eucharistic mystery is the source and summit of Christian life.

The Encyclical letter of Pope Paul VI 'Mysterium Fidei' deals entirely with the doctrine and worship of the Holy Eucharist. It mainly says that the most holy Eucharist is the very great mystery of faith. By means of the Eucharistic mystery of the Holy Mass, the sacrifice of the Cross, achieved once on Calvary, is marvellously symbolized and continually recalled to the memory that Christ the Lord is present in the Sacrament of the Eucharist by 'Transubstantiation'.

The Encyclical letter of Pope Pius XII 'MYSTICI CORPORIS CHRISTI' deals mostly with the mystical body of Jesus Christ, i.e. the

Church; but at the same time it does not forget to mention the greatness of the Eucharistic mystery in the Church. Christ, Our Lord, willed to manifest an inestimable union of the mystical body through the Eucharistic sacrifice which presents a vivid and marvellous picture of the unity of the Church.

In His letter to all the bishops, Pope John Paul II in 1980, values the Eucharistic mystery in the life of the church and of the priests. The sacrament of the priesthood effectively came into being at the moment of the institution of the Eucharist. It is the source of Charity and It is at the centre of the life of Christ's disciples.

***Bro. J.A. Arulthasan***

## ' ECCLESIA DE EUCHARISTIA '

The fourteenth Encyclical letter of Pope John Paul II is intended to offer a deeper reflection on the mystery of the Eucharist in its relation ship with the Church. The Eucharistic sacrifice, "the source and summit of the Christian life", contains the Church's entire spiritual wealth: Jesus Christ who offers himself to the Father for the redemption of the world. The first chapter, "The mystery of Faith" enplains the sacrificial nature of the Eucharist. "The Eucharist Builds the Church" is the title of the second chapter. When the faithful approach the sacred banquet, not only do they receive Christ, but they in turn are also received by Him. The third chapter is a reflection on " The Apostolicity of the Eucharist and of the Church." The 'Dignity of the Eucharistic celebration is the subject of the fifth chapter. The sixth Chapter, "At the School of Mary, Woman of the Eucharist", is a timely and original reflection on the surprising analogy between the Mother of God and the Church. The conclusion in demanding: those who wish to pursue the path of holiness need no new "programmes." The programme already exists: it is Jesus Christ Himself.

***Bro. F.T. Judethas.***

# குறுக்கெழுத்துப் போட்டி இல.11

## சரியான விடைகளும் முடிவுகளும்

**இடமிருந்து வலம்**

1. சமாதானம்
5. முற்றுகை
7. திரு
8. சாசனம்
10. மகத்துவம்

**மேலிருந்து கீழ**

1. சமுதாயம்
2. மாற்று இனம்
3. காருண்யம்
4. எச்சரிக்கை
6. கரிசனை
7. சாதி
9. காது

குறிப்பு: 10 இடமிருந்து வலம் விடையில் தவறு ஏற்பட்டிருப்பினும் வாசகர்கள் அதை புரிந்து கொண்டு சரியான விடையை எழுதியுள்ளீர்கள் பாராட்டுக்கள்.
தவறுக்காக வருந்துகிறோம்.

## பரிசு பெறுவோர்



1. பா. யூலின் அனிற்றா
செின் ஜேம்ஸ் வீதி,
இளவாலை.

2. மரியநாயகம் மேரி அனுசியா
செின் மேரிஸ் லேன்,
தும்பளை, பருத்தித்துறை.



3. எ.க. மேரி அருள்மதி
ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம் உடுவில்.

**பங்குபற்றிய அனைவருக்கும் பாராட்டுக்கள்**

## குறுக்கெழுத்துப் போட்டி இல.12

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 |
| 3 | 4 | ❄ | 5 | ❄ | |
| | | 6 | | 7 | |
| | | | | | |
| | | | | | |
| 8 | | | | | |

அனுப்புபவரின் பெயர் :

விலாசம் :

### இடமிருந்து வலம்

1. மனித தலையீட்டினால் தாயின் கருவறையிலிருந்து உருவான கருவை வெளியேற்றுதல் இவ்வாறு அழைக்கப்படும் (6)
3. வடிவம் மாறியுள்ளது (2)
8. ஆறாம் சின்னப்பர் எழுதிய "மனித உயிர்" என்பது ஒரு **இது** ஆகும் (6) (வலமிருந்து இடமாயுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. செயற்கை **இது** ஒழுக்கவியலுக்கு முற்றிலும் மாறானது (6)
2. எறும்புக்கும் **இதற்கும்** நெருங்கிய தொடர்பு உண்டு (6) (தலைகீழாயுள்ளது)
4. மாதவிடாய் ஆரம்பிப்பதற்கு முன்னர் 14 நாள் வரை **இதில்** ஈடுபட்டால் கருத்தரித்தல் நடைபெறமாட்டாது (5) (குழம்பியுள்ளது)
5. யாழ் மறைமாவட்ட உளவளத்துணை நிலையத்தின் பெயர் (4)
6. செயற்கைக் கருவூட்டல் செய்வதற்கு கணவனுடைய **இந்த** தன்மையும் ஒரு காரணமாகும் (4) ( தலைகீழாயுள்ளது)
7. ஓட்டோ டிபேலியுஸ் என்பவர் **இப்படியான** கருவூட்டலினால் பெண்ணின் ஆன்மீக வாழ்வு பாதிக்கப்படும் என்கிறார் (4) (குழம்பியுள்ளது)

- விடைகளில் பெரும்பாலானவை ஜூன் 2003 இதழில் உள்ளன.
- விடை எத்தனை எழுத்துக்களால் ஆனது என்பதை அடைப்புக் குறிக்குள் உள்ள எண் குறிக்கும்.
- விடைகள் வந்து சேரவேண்டிய இறுதிநாள் டிசம்பர் மாதம் 05ம் திகதி.
- உங்கள் நண்பர்களுக்கும் இப்போட்டியை அறிமுகப்படுத்தி பங்குபற்றச் செய்யுங்கள்.


குறுக்கெழுத்துப் போட்டி இல. 12
இறையியல் கோலங்கள்
புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.



என்ற விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள்.

## அடுத்து வெளிவர இருப்பது

# உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!



St. Joseph's Catholic Press 360,Main Street, Jaffna. 2003
Tel. 021-2222378

# இறையியல் கோலங்கள்

தமிழ் இறையியல் காலாண்டு இதழ்

ஆண்டு சந்தா உள்நாடு (அஞ்சல் செலவு உட்பட) ரூபா 80/=
வெளிநாடு (அஞ்சல் செலவு உட்பட) 5 USD

தனிப் பிரதி 25/=

தொடர்புகொள்க:

**இறையியல் கோலங்கள்**
**புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி**
**கொழும்புத்துறை**
**யாழ்ப்பாணம்**

தொலைபேசி: 021 222 2482

# IRAI IYAL KOLANGAL

*A Tamil Theological Quarterly*

**Annual Subscription: Local (Incl. postage) Rs 80/=**
**Foreign (Incl. postage) 5 USD**

**Single copy Rs 25/=**

Correspondence to:

Iri iyal Kolangal
St. Francis Xaver's Seminary
Columbuthrai
Jaffna
Sri Lanka

Tel: 021 222 2482